Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, NOVEMBER 14, 2022

திங்கட்கிழமை, 14 நவம்பர் 2022 | ஒளி: 08 கதிர்: 142 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## முட்டைகளை பதுக்கினால் பாயும்

முட்டைகளை பதுக்கி வைக்கும் உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வர்த்தக, வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ எச்சரிக்கை விடுத்துள்ளார். சந்தையில் முட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை என்று தெரிவித்த அமைச்சர், எனினும் சில தரப்பினர் முட்டை தட்டுப்பாடு இருப்பதாக சித்திரிக்க முயல்வதாகவும் முன்னதாக வர்த்தமானி மூலம்

தொடர்ச்சி P2

## ‘எமது உரிமை மீட்புப் போராட்டம்’

### கொச்சிக்கடையில் தடுத்து நிறுத்தம்

எம். இஸட். ஷாஜஹான்

வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 32 வருடங்களாகியுள்ள நிலையில், ‘எமது உரிமை மீட்புப் போராட்டம்’ என்னும் தொனிப்பொருளில் நடத்தப்பட்ட நடைபவனியில் கலந்து கொண்ட மூவர், நீர்கொழும்பு பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டதுடன், நடைபவனி கொச்சிக்கடையில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. கிளிநொச்சி, நாச்சிக்குடா கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதியன்று, நாச்சிக்குடாவில் இருந்து ஆரம்பமாகிய நடைபவனியில் இருவரும் அவர்களுக்கு துணையாக வந்த ஒருவரும், நீர்கொழும்பு, கொச்சிக்கடை பிரதேசத்தை சனிக்கிழமை இரவு வந்தடைந்து, அங்கு விடுதி ஒன்றில் தங்கியிருந்தனர்.

தொடர்ச்சி P2



## விலை திருத்தம் நாளை இல்லை

### 6 மாதங்களின் பின் 95 ரக பெற்றோல்

கடந்த வெள்ளிக்கிழமை (11) எரிபொருள் விலைகள் திருத்தப்பட்டமையால், நாளை (15) மீண்டும் விலைகள் திருத்தப்பட மாட்டாது என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# 23/24 நிதி உபாய பட்ஜெட் இன்று



நிதி அமைச்சர், பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டம் (பட்ஜெட்), பாராளுமன்றத்தில் இன்று (14) சமர்ப்பிக்கப்படவுள்ளது. பாராளுமன்றம் இன்று (14) பிற்பகல் 1.30க்கு கூடியதன் பின்னர், பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர், பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும்.

தொடர்ச்சி P2

# பெண் கான்ஸ்டபிளின் கழுத்தை பிடித்த ஓ.ஐ.சி

### விசாரணைகளை ஆரம்பித்தது பொலிஸ்



பாணந்துறை தெற்கு பொலிஸ் தலைமையக அதிகாரி, பெண் கான்ஸ்டபிள் ஒருவரின் கழுத்தை பிடித்து தள்ளும் வீடியோ குறித்து, உதவி பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்தது.

மேலும், பெண் போராட்டக்காரர்களை அச்சுறுத்திய மற்றும் தாக்கியமை குறித்தும் வீடியோவில் பதிவாகியுள்ளதாகவும் அது குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### வடக்கு, கிழக்கு துயிலும் இல்லங்களில்

## 27 மாலை 6.05 விளக்கேற்றுவோம்



வா.கிருஸ்ணா

வடக்கு, கிழக்கில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் எதிர்வரும் 27ஆம் திகதி மாலை 6.05 மணிக்கு அரசியல் கட்சி வேறுபாடுகள் மறந்து அனைவரும் ஒன்றிணைந்து விளக்கேற்ற முன்வரவேண்டும் என்று தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், அன்றைய தினம் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு தமிழ் மக்கள் சென்று அஞ்சலி செலுத்துவது கடமையெனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 11 இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது



இந்திய பிரத்தியேக பொருளாதார வலயத்துக்குள் நுழைந்த இலங்கை மீனவர்கள் 11 பேர், இந்திய கடலோரக் காவற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களின் 2 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை கையளிப்பதற்கு நடவடிக்கை

ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை அனைத்து கட்சித் தலைவர்கள் மற்றும் சிவில் அமைப்புகளிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.



தொடர்ச்சி P2



### முட்டை பிரச்சினையை தீர்க்காவிடின்

## நாட்டிலுள்ள ஹோட்டல்கள் முற்றாக மூடப்படும்

எதிர்வரும் இரண்டு நாள்களுக்குள் முட்டை பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிடின், புதன்கிழமைக்குள் (16) நாடு முழுவதும் உள்ள ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் முற்றாக மூடப்படும் என்று அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் எச்சரித்தார்.

தொடர்ச்சி P2

## ‘ஐஸ்’இல் மிதக்கும் மாணவிகள்

ஐஸ், உள்ளிட்ட போதைப்பொருட்களின் பாவனைகள் பாடசாலை மாணவ, மாணவிகள் மத்தியில் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது. வடமேல் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் பெருமளவிலான மாணவிகள் தற்போது ஐஸ் உள்ளிட்ட பல்வேறு போதைப்பொருட்களுக்கு அடிமையாகி உள்ளதாக தெரியவந்துள்ளது. பல பிரதான பாடசாலைகளில் கல்வி கற்கும் அதிகளவான மாணவிகள், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளதாக

தொடர்ச்சி P2

### சீன தூதரகத்துக்கு முன் ஆர்ப்பாட்டம்

## ஐ.தே.க உறுப்பினருக்கு எதிராக நடவடிக்கை



கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்திய ஐக்கிய தேசிய கட்சியின் சீதவாக்கை பிரதேச சபை உறுப்பினர் சஷி ஹெட்டியாராச்சிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பொலிஸார் அட்டூழியம்: சாலிய பீரிஸ் கண்டனம்

நாட்டில் நடக்கும் பல சம்பவங்கள், இலங்கை பொலிஸ் படை சீரழிந்துள்ளமையை எடுத்துக் காட்டுகிறது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

அதிகாரம் உள்ளவர்களின் தோல்வியாலும், அலட்சியப் போக்காலும் பொலிஸாரின் இதுபோன்ற அத்துமீறல் சம்பவங்கள் தொடர்கின்றன என்றும் அவர் தனது ‘டுவிட்டர்’ பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

## பிரேதப் பெட்டி கடையின் உரிமையாளர் கைவரிசை

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு நகரில் பூட்டிய வீடொன்றை உடைத்து கைவரிசை காட்டிய பிரேதபப் பெட்டி விற்பனை கடையின் முன்னாள் உரிமையாளர் உட்பட இருவர் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அந்த வீட்டை உடைத்து, தொலைக்காட்சி பெட்டி, காஸ் சிலிண்டர், வூபர் செற் மற்றும் 27 ஆயிரம் ரூபாய் பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளார்.

தொடர்ச்சி P2

## மொட்டுக் கட்சியின் கூட்டங்கள் நிறுத்தம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவால் நாடு முழுவதும் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த கூட்டத் தொடர் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் மூலம் அறிய முடிகிறது.

தொடர்ச்சி P2

# “தமிழ்நாட்டு மக்கள் என்னை கண்டிப்பாக ஏற்றுக்கொள்வர்”



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வரும் நளினி, ரவிச்சந்திரன், முருகன், சாந்தன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய 6 பேரையும் விடுதலை செய்து உச்சநீதிமன்றம் வெள்ளிக்கிழமை (11) தீர்ப்பளித்தது.

தீர்ப்பின் தொடர்ச்சியாக, வேலூர் சிறையில் இருந்து நளினி, முருகன், சாந்தன் ஆகியோர் சனிக்கிழமை (12) விடுதலை செய்யப்பட்டனர். வேலூர் பெண்கள் தனிச் சிறையில் இருந்து நளினியும் வேலூர் சிறையில் இருந்து முருகன், சாந்தன் ஆகியோரும் விடுதலை செய்யப்பட்டனர். பரோலில் இருந்து நளினியை பொலிஸார் தகுந்த பாதுகாப்புடன் வேலூர் சிறைக்கு அழைத்துச் சென்று, விடுதலை தொடர்பான நடைமுறைகளை முடிந்த பிறகு, அவரை விடுதலை செய்தனர். இதேபோல் முருகன், சாந்தன் ஆகியோரும் நடைமுறைகள் முடிந்து விடுதலை செய்யப்பட்டனர். விடுதலைக்கு பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தார் நளினி.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## 'எமது உரிமை மீட்புப் போராட்டம்'

இந்த நிலையில் நேற்று (13) காலை 8.30 மணி அளவில் பொலிஸார் அங்கு வந்து நடைபவனியில் ஈடுபடும் நாச்சிகுடாவை சேர்ந்த ஹசன் குத்தூஸ் முஹம்மத் ஆமீம், சையது அலி ஈஷா மொஹிதீன், இனாமுதீன் உமர் பாரூக் ஆகியோரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

கொச்சிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, குறித்த மூவரையும் பொலிஸ் வாகனத்தில் கொழும்பு ஜனாதிபதி செயலகத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார்.

அங்கு செயலாளரை சந்தித்து தாங்கள் செவ்வாய்க்கிழமையே ஜனாதிபதியை சந்திக்க இருந்ததாகவும் இது தொடர்பான ஆவணங்களை தயாரித்து வருவதாகவும் தெரிவித்த நிலையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (15) முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் மகஜரை கையளிப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 32 வருடங்களாகியும் தமக்கான மீள்குடியேற்றம் துரிதகதியில் இடம்பெறவில்லை எனவும் யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம்களுக்கு எந்தவித சலுகைகளும் வழங்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## முட்டைகளை பதுக்கினால் பாயும்

அறிவிக்கப்பட்ட முட்டை விலையை அதிகரிக்க அனுமதி வழங்க மாட்டோம் என்றும் கூறினார். உற்பத்தி செலவு கணிசமாக உயர்ந்துள்ளதால், அரசாங்கம் அறிவித்துள்ள அதிகபட்ச சில்லறை விலைக்கு முட்டையை விற்க முடியாது என்று முட்டை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, அரசாங்கம் அறிவித்துள்ள அதிகபட்ச சில்லறை விலைக்கு மேல் முட்டைகளை விற்பனை செய்பவர்களுக்கு அபராதம் விதிக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை சோதனைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 23/24 நிதி உபாய பட்ஜெட் இன்று

இது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் இரண்டாவது வரவு-செலவுத் திட்டமாகும்.

இந்த ஆண்டின் இறுதி நான்கு மாதங்களுக்காக, ஜனாதிபதியால் இடைக்கால வரவு-செலவுத்திட்டம் அண்மையில் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

"நிதியமைச்சரால் இன்று (14) சமர்ப்பிக்கப்படும் அடுத்தாண்டுக்கான வரவு- செலவுத் திட்டம், பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படை நிவாரணம் வழங்கும் வகையிலான இலக்கை கொண்டிருக்கும்" என, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

"முழுநாட்டு சனத்தொகையில் 75 சதவீதமான மக்கள் நிவாரணத்தை எதிர்பார்த்து இருக்கின்றனர். அந்த மக்கள் தொடர்பில் இந்த வரவு- செலவுத் திட்டத்தில் ஆகக் கூடுதலான அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் நாட்டை அடுத்த வருடம் கட்டியெழுப்பும் நோக்கில், ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதி உபாயத்துடன் தயாரிக்கப்பட்ட இந்த வரவு-செலவுத் திட்டம் 2024 ஆம் ஆண்டில் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழுந்து பண வீக்கத்தை கட்டுப்படுத்துவதாக அமைந்திருக்கும்" என்றார்.

இன்று (14) தாக்கல் செய்யப்படும் வரவு-செலவுத் திட்டம் மீதான இரண்டாம் வாசிப்பு, நாளை (15) ஆரம்பமாகும். இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 22 ஆம் திகதி மாலை 5 மணிக்கு இடம்பெறும்.

வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் நவம்பர் 23 ஆம் திகதி ஆரம்பமாகும். இறுதி வாக்கெடுப்பு டிசெம்பர் 8ஆம் திகதி நடைபெறும்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் சமர்க்கப்படுவதால் பாராளுமன்றத்தின் பாதுகாப்பு இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்துக்கு இன்றையதினம் செல்வோர் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்களின் அறைகளும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெண் கான்ஸ்டபிளின் கழுத்தைப் பிடித்த ஓ.ஐ.சி

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் பிக்கு சம்மேளனத்தின் அழைப்பாளர் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோரை விடுதலை செய்யுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி சனிக்கிழமை (12) காலை 9.30 மணியளவில் களுத்துறையில் இருந்து இரண்டு பெண்களால் ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

சிறிதம்ம தேரர் மற்றும் வசந்த முதலிகே ஆகியோரின் உருவங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு குறித்த இரு பெண்களும் ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டனர். களுத்துறை பாலத்தில், இரண்டு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் உட்பட கிட்டத்தட்ட இருநூறு பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவர்களை வழிமறித்ததை அடுத்து, காலி வீதியூடாக பஸ்ஸில் கொழும்பு நோக்கி சென்ற 2 பெண்கள் மற்றும் குழுவினர், களுத்துறை வடக்கு பகுதியில் இறங்கி மீண்டும் பேரணியாக செல்ல ஆரம்பித்தனர். அதன் பின்னர், வாதுவ, பின்வத்த, பாணந்துறை தெற்கு பொலிஸ் அதிகாரிகள் பல தடவைகள் அவர்களை திசை திருப்ப முயன்ற போது, போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும், பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

பாணந்துறை பிரதேசத்தில் வைத்து குறித்த பெண்களை கைது செய்ய தயாராகிய போது, அவர்களை கைது செய்ய பெண் கான்ஸ்டபிள்கள் முன்வராததை அடுத்து, "எதற்காக காத்திருக்கிறாய்?" என்று கூறி குறித்த அதிகாரி, பெண் கான்ஸ்டபிள் ஒருவரின் கழுத்தை பிடித்து தள்ளும் வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகியது.

பின்னர் இரு பெண்களையும் கைது செய்த பொலிஸார், கைது செய்வதை தடுக்க மூயன்ற மூவரையும் கைது செய்து, பின்னர் ஐவரையும் பிணையில் விடுவித்தனர்.

இந்நிலையில், குறித்த இரண்டு பெண்களும் மொரட்டுவ குறுக்கு சந்தி பிரதேசத்தில் இருந்து நேற்று (13) மீண்டும் காலிமுக்திடல் நோக்கி பேரணியை ஆரம்பித்த போது, பொலிஸார் தடுத்து நிறுத்தியதால் வாக்குவாதம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்ட பேரணியாக செல்ல முடியாது என்றும் வாகனங்களில் செல்ல முடியும் என்றும் பொலிஸார் சந்தர்ப்பம் வழங்கியதை அடுத்து, பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் காலி முகத்திடலை சென்றடைந்தனர்.

## விலை திருத்தம்...

ஒவ்வொரு மாதமும் 1 மற்றும் 15 ஆம் திகதிகளில் எரிபொருள் விலைகள் திருத்தப்படும் என்று அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்தது. எனினும், இந்த மாதம் 1ஆம் திகதி எரிபொருள் விலைகள் குறைக்கப்படும் என்ற காரணத்தால் எரிபொருள் நிரப்பு உரிமையாளர்கள் எரிபொருட்களை முற்பதிவு செய்யவில்லை.

இதன் காரணமாக, ஒக்டோபர் கடைசி வாரம் மற்றும் நவம்பர் முதல் வாரத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லாத காரணத்தால் நீண்ட வரிசை நிலவியது. அதற்கமைய, நவம்பர் முதல் வாரத்தில் எரிபொருள் விலைத்திருத்தம் இடம்பெறாது என்று அமைச்சர், அறிவித்தை அடுத்து, நிலைய உரிமையாளர்கள் எரிபொருள்களை மீண்டும் பெறத் தொடங்கினர்.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை (11) நள்ளிரவு முதல், டீசலின் விலை 15 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 430 ரூபாயாகவும் மண்ணெண்ணெய் 25 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 365 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வழங்குநர்களுடன் ஏற்படுத்திய புதிய முறைமைக்கு அமைய, கடந்த 55 நாள்களாக நங்கூரமிடப்பட்டிருந்த கப்பலில் இருந்து மசகு எண்ணெயை தரையிறக்கும் பணி சனிக்கிழமை (12) ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த ஏப்ரல் மாதத்தின் பின்னர், முதலாவது தொகுதி 95 ரக பெற்றோலை தரையிறக்கும் பணியும் நேற்று முன்தினம் (12) ஆரம்பமாகியதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## 27 மாலை 6.05...

எதிர்வரும் 27 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள மாவீரர் தினத்தை முன்னிட்டு, மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தை சிரமதானம் மூலம் தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகள், நேற்று (13) காலை ஆரம்பமாகின.

தமிழரசுக் கட்சியின் பட்டிப்பளை கிளையின் ஏற்பாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தலைமையில் நடத்தப்பட்ட சிரமதானத்தில் பட்டிப்பளை பிரதேச சபையின் தவிசாளர் என்.புஸ்பலிங்கம் உட்பட கட்சி உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது சிரமதானத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய அரியநேத்திரன் தெரிவித்ததாவது:

உயிரிழந்த மாவீரர்களின் பெற்றோர்கள் இன்றும் உயிருடன் இருக்கிறார்கள். வருடா வருடம் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் நாம் நினைவு கூர்ந்திருக்கிறோம் எனவும் தெரிவித்த அவர், மாவடி முன்மாரி துயிலும் இல்லத்துக்கு தனியாக வந்து 2011 ஆம் ஆண்டு நினைவு மாவீரர்களை நினைவு கூர்ந்ததாக குறிப்பிட்டார். 2020, 2021 ஆம் ஆண்டுகளில் ஆட்சியாளர்களின் அடக்கு முறைகளால், எங்களுக்கெதிராக நீதிமன்ற தடையுத்தரவு பெறப்பட்டதன் காரணமாக, நாங்கள் வீடுகளிலேயே மாவீரர்களை நினைவு கூர்ந்திருந்தோம் என்பதையும் சுட்டிக்காட்டினார். ஆனால் இவ்வருடத்தில் அவ்வாறில்லாமல் இயல்பு நிலை திரும்பியிருக்கிறது என்ற காரணத்தால் இவ்வருடம் அக்கெடுபிடி இருக்காது என நினைப்பதாகவும் தெரிவித்தார். வடக்கு- கிழக்கில் உள்ள 33 மாவீரர் துயிலும் இல்லங்களில் சிலவற்றில் படையினர் தங்கியுள்ளனர் என்றும் மட்டக்களப்பு, தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் படையினர் தற்போதும் நிலைகொண்டுள்ளனர். 2019 ஆம் ஆண்டுக்கு முன்னர் எவ்வாறு விளக்கேற்றினோமோ அதேபோல விளக்கேற்றவுள்ளதாக குறிப்பிட்டார்.

## பொலிஸார் அட்டூழியம்...

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இரண்டு பெண்களை பொலிஸார் கையாடண்ட விதம் மற்றும் இரண்டாவது சம்பவமாக, பெண் கான்ஸ்டபிளின் கழுத்தில் உயர் அதிகாரியொருவர் கைவைத்தமை குறித்து வெளியான படங்கள் குறித்தும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்றாவது சம்பவமாக, தேசிய அடையாள அட்டையை கைவசம் வைத்திருக்காமையால் தன்னுடைய நண்பர் ஒருவர் பொலிஸ் நிலைய சிறையில் அடைக்கப்பட்டதாக சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவர் தனக்கு அறிவித்ததாகவும் சாலிய பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து நடப்பதற்கு அலட்சியப் போக்கு காரணம் என்றும் வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பிரேத பெட்டி...

அத்துடன், கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை வாங்கிக் கொடுத்த தரகரும் அடங்குவர்.

அவ்விருவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான், சனிக்கிழமை (12) உத்தரவிட்டார்.

வீட்டை பூட்டிவிட்டு ஒக்டோபர் 25ஆம் திகதியன்று குடும்பமாக வெளியூர் சென்றிருந்த அவர்கள், நவம்பர் 7 ஆம் திகதியன்று வீட்டுக்குத் திரும்பியுள்ளனர். அப்போது வீட்டின் பின்பக்க கதவு உடைக்கப்பட்டிருந்தமை கண்டுள்ளனர். அதன்பின்னர் தேடியபோதே வீட்டிலிருந்த பல பொருட்கள் களவாடப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே இவ்விருவரும் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## 11 இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது

வங்காளவிரிகுடாவில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த கரையோர காவல் படையினர், கலிங்கபட்டினம் கரைக்கு அருகே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்த ஊடகங்கள் தெரிவித்துள்ளன. 11 மீனவர்களும் மேலதிக விசாரணைகளுக்காக ஆந்திர மாநிலம் காக்கிநாடா கரையோர பாதுகாப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ஒப்படைக்கப்பட்ட மீனவர்களிடம் சுங்கம், உளவுப் பிரிவு மற்றும் மீன்பிடித் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன

வெளிநாட்டு மீன்பிடிப் படகுகள், இந்திய பிரத்தியேக பொருளாதார வலயத்துக்குள் அத்துமீறி மீன்பிடிப்பது குற்றமாகும் என்பதுடன், அதனூடு பயணிப்பதற்கு அனுமதி பெற வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 'ஐஸ்'இல் மிதக்கும்...

8 ஆம் தரத்தில் இருந்து உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவிகள் இவ்வாறு போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணத்தின் முக்கிய நகரங்களில் அமைந்துள்ள பிரதான பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவிகள் இவ்வாறு போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டுள்ளதாகவும், அவர்கள் தமது காதலர்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரிகள் ஊடாக போதைப்பொருளை பெற்று வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சில காலங்களுக்கு முன்னர் பாடசாலை மாணவர்கள் மத்தியில் பிரபலமாக இருந்த தூள் என்ற போதைப்பொருள் தற்போது மாணவிகள் மத்தியிலும் பரவி வருவதும், பள்ளி நேரங்களில் கழிவறைக்கு செல்லும் போது இதை அடிக்கடி பயன்படுத்துவதும் தெரியவந்துள்ளது.

மேலும், வார இறுதி நாள்களில் முக்கிய நகரங்களில் நடத்தப்படும் தனியார் பயிற்சி வகுப்புகளுக்குச் செல்கிறேன் என்ற போர்வையில் மாணவிகள் தங்கள் ஆண் நண்பர்கள் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்து இந்தப் போதைப்பொருட்களை பயன்படுத்த ஆசைப்படுவதும் தெரியவந்துள்ளது.

இது மிகவும் பாரதூரமான பிரச்சினை எனவும், நிலைமையை கட்டுப்படுத்த அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பெயர் குறிப்பிட விரும்பாத குருநாகல் பாடசாலையின் அதிபர் ஒருவர் தெரிவித்தார்.

## ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை...

குறித்த சட்டமூலம் தொடர்பாக அனைத்து தரப்பினரதும் கருத்துகள் மற்றும் யோசனைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அனைத்து தரப்பினரது கருத்துகளையும் பெற்றுக்கொண்டதன் பின்னர் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும்

ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்திற்கு அமைவாக சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

## ஐ.தே.க உறுப்பினருக்கு...

இலங்கைக்கு வழங்கிய கடனை மறுசீரமைக்குமாறு சீனாவைக் கோரி, கடந்த வெள்ளிக்கிழமை (11) அவர் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தார்.

பிரதேச சபை உறுப்பினர் சசி ஹெட்டியாராச்சி நடத்திய ஆர்ப்பாட்டத்துக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று தெரிவித்த ரங்கே பண்டார, பொதுச் செயலாளர் என்ற ரீதியில் தம்மிடமோ அல்லது கட்சியினரிடமோ ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பது குறித்து எதுவும் அறிவிக்கப்படவில்லை என்றார். தமது கட்சி இராஜதந்திரத்தில் நம்பிக்கை கொண்டுள்ளது எனவும் அரசாங்கம் சீனாவுடனான கடன் விவகாரங்களை இராஜதந்திர உறவுகளின் மூலம் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

ஒரு கட்சி என்ற வகையில் நிதியமைச்சின் எந்தவோர் இராஜதந்திர தலையீடுகளிலும் ஐக்கிய தேசிய கட்சி ஈடுபடாது என்றும் ரங்கே பண்டார கூறினார்.

## நாட்டிலுள்ள ஹோட்டல்கள்...

முட்டை தட்டுப்பாடு காரணமாக அப்பம், பிரைட் ரைஸ், கொத்து ரொட்டி, முட்டை ரொட்டி, முட்டை ரோல்ஸ், கேக், புடிங், வட்டிலப்பம் போன்ற உணவுப் பொருட்களின் உற்பத்தி முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

வர்த்தக அமைச்சு உட்பட அனைத்து பொறுப்பு வாய்ந்த பிரிவுகளும் உடனடியாக தலையிட்டு முட்டை சங்கங்களுடன் கலந்துரையாடி இப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும். இல்லையெனின் பிரச்சினை தீவிரமடையும் என்றார்.

விலையை குறைக்க வேண்டுமானால் குறையுக்குமாறும் அதிகரிக்க வேண்டுமானால் அதிகரிக்குமாறும் தெரிவித்த அவர், ஏதாவது செய்து தமக்கு முட்டை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

## மொட்டுக் கட்சியின் கூட்டங்கள் நிறுத்தம்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் கூட்டத் தொடர் களுத்துறையில் ஆரம்பமானதுடன், நாவலப்பிட்டி, ஆனமடுவ ஆகிய பிரதேசங்களில் நடைபெற்றன.

பல மாவட்டங்களிலும் கூட்டத் தொடரை நடத்துவதற்கான திகதிகள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுஜன பெரமுனவின் அரசியல் கூட்டங்களை நடத்துவது பொருத்தமற்றது என்று கட்சியின் எம்.பிக்கள் சுட்டிக்காட்டியுள்ளதாக தெரியவருகிறது.

முதலில் கட்சி உறுப்பினர்களைக் கவனித்து, கட்சியை ஒழுங்கமைத்த பின்னர், முன்னாள் ஜனாதிபதி தலைமையில் கூட்டங்களை நடத்துவதே சிறந்தது என்று எம்.பிக்கள் சுட்டிக்காட்டியதை அடுத்து, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## "தமிழ்நாட்டு மக்கள் என்னை கண்டிப்பாக ஏற்றுக்கொள்வர்"

"கடந்த 32 ஆண்டுகளாக எங்களை மறக்காமல் உறுதுணையாக இருந்த தமிழக மக்களுக்கு நன்றி.

32 ஆண்டுகள் சிறையில் இருந்தது கஷ்டமாகத் தான் இருந்தது. 32 ஆண்டுகள் போய்விட்டன. இதன்பிறகு என்ன சந்தோஷம் உள்ளது. ஆனாலும், விடுதலைக்கு உதவிய அனைத்து தமிழ் நெஞ்சங்களுக்கும் என்னுடைய நன்றிகள். எனது மகள் இங்குவர இப்போதைக்கு வாய்ப்பில்லை. நானும் எனது கணவரும் லண்டன் சென்று அவளைச் சந்திப்போம்.

விடுதலையை சிலர் விமர்சித்திருக்கிறார்கள். எல்லோருக்கும் கருத்து சுதந்திரம் உள்ளது. இது சகஜமான ஒன்றுதான். எல்லோருக்கும் ஒரே கருத்து இருக்க முடியாது. மற்றவர்களின் கருத்தை ஏற்க வேண்டும்; உள்வாங்க வேண்டும்.

ராஜீவ் படுகொலையில் காவல்துறையை சேர்ந்த 7 பேர் உயிரிழந்துள்ளனர். அதனால், அவர் எனக்கு விடுதலை தர முடியும் என்பதை நான் எப்படி எதிர்பார்க்க முடியும். 32 வருடங்கள் சிறையில் இருந்துவிட்டோம். அவர்களுக்கு இது திருப்தியாக இல்லையா என்று தெரியவில்லை. ராஜீவ் காந்தி படுகொலை சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு எனது அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.



# அக்கறை எடுத்தால் நீரிழிவு ஒரு நோயல்ல!

## இன்று உலக நீரிழிவு தினம்



டொக்டர்
வெ. நாகநாதன்



நீரிழிவு நோயாளிகள், வாழ்க்கை முறையில் செய்யும் சின்னச் சின்ன மாற்றங்கள் மூலம், அந்நோயைத் திறம்படச் சமாளிக்க முடியும். கடுமையான உடற்பயிற்சிகளைக் கண்டு அஞ்சாமல், கொஞ்சம் கொஞ்சமாக முயலலாம் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்நோயை முழுதாகக் குணமாக்க முடியாது. இருப்பினும் மருத்துவ ஆலோசனைப்படி நடப்பதில், நோயாளி முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம், இந்நோயின் தொடர் விளைவுகளைத் தடுக்கவும் குறைக்கவும் முடியும். நீரிழிவு நோயாளி, சுயகட்டுப்பாட்டுடன் எந்நேரமும் கவனத்துடன் செயற்பட்டால் உடல் ஆரோக்கியத்தைப் பேணி, வாழ்நாளை நீடித்துக்கொள்ள முடிகிறது.

நீரிழிவு நோய் குறித்து நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக அறியப்பட்டிருந்தாலும் கூட, இதற்கான உறுதியான சிகிச்சை முறை என்பது 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பக் கட்டத்தில் தான் கண்டறியப்பட்டது. 1922ஆம் ஆண்டில் 'பேண்டிங்க் அண்ட் பெஸ்ட்' என்ற கனடா நாட்டு விஞ்ஞானிகள் கூட்டணி, இன்சுலின் மூலம் நீரிழிவு நோயை முழுமையாக கட்டுப்படுத்தலாம் என்பதைக் கண்டறிந்தனர். அதுவரை, ஒருவருக்கு நீரிழிவு நோய் வந்தால் மரணம் நிச்சயம் என்கிற நிலைதான் நீடித்தது.

இன்சுலினை கண்டுபிடித்த 'பேண்டிங்க் அண்ட் பெஸ்ட்' என்ற விஞ்ஞானிகள் கூட்டணியின் தலைவர் பிரெடெங்க் பேண்டிங்கின் பிறந்த நாளான நவம்பர் 14ஆம் திகதியை, ஆண்டுதோறும் உலக நீரிழிவு நோய் தினமாக கடைபிடிக்கப்படுகிறது. முதன்முதலில் இது 1991ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்படத் தொடங்கியது.

ஐக்கிய நாடுகள் சபை, நீரிழிவு நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தனியான அடையாளச் சின்னத்தை வடிவமைத்து வெளியிட்டிருக்கிறது. நீலநிறத்திலான வளையம் நீரிழிவு நோய் தடுப்பின் சின்னமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எய்ட்ஸ் நோய்க்கு அடுத்தபடியாக, நீரிழிவு நோய்க்கு மட்டுமே, ஐ.நா சபை இப்படித் தனியான ஒரு சின்னத்தை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

உலகெங்கும் சுமார் 347 மில்லியன் நீரிழிவு நோயாளிகள் இருப்பதாக, உலக சுகாதார நிறுவனம் குறிப்பிடுகிறது. மரணத்தை ஏற்படுத்தும் நோய்களில் இது, 2030ஆம் ஆண்டுக்குள் ஏழாவது இடத்தைப் பிடித்துவிடும் என்று மதிப்பிடப்படுகிறது.

நீரிழிவு தொடர்பாக கருத்து வெளியிட்ட அமெரிக்க டொக்டர் ஒருவர் "நீரிழிவு உள்ள ஒருவர் தனக்கு நீரிழிவு உள்ளதென்று தெரிந்து கொண்டால், நீரிழிவு என்பது அவருக்கு ஒரு நோயல்ல" என்று குறிப்பிட்டிருந்தார். இதன் அர்த்தம் நீரிழிவு நோய் உள்ள ஒருவர், தனது கட்டுப்பாட்டின் மூலம் நோயைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம் என்பதாகும். நாம் நோயைக் கட்டுப்பாடாக வைத்திருப்பதற்கு, முதலில் அந்நோயைப்பற்றி முழுமையாக நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். அதாவது நீரிழிவு நோய் என்ன காரணத்தால் ஏற்படுகிறது. அது மனித உடலை எந்த வகையில் பாதிக்கிறது என்பதைப் பற்றிய விளக்கங்களை நோயாளிகள் மட்டுமல்லாது அனைவரும் அறிந்திருத்தல் வேண்டியது இன்றியமையாதது.

எமது இரத்தத்தில், இனிப்புச்சத்தின் (குளுக்கோஸ்) அளவு வழமையாக இருப்பதிலும் பார்க்க அதிகரிப்பதாலேயே நீரிழிவு நோய் ஏற்படுகிறது. இக்குளுக்கோஸானது நாம் உண்ணும் உணவிலுள்ள மாப்பொருள் சமிபாடடைந்து குளுக்கோஸாக மாற்றப்பட்டு, குருதியால் அகத்துறிஞ்சப்படுகிறது. சாதாரண மனிதனின் 100ml குருதியில் 80-120mg குளுக்கோசஸ் காணப்படுகிறது. எமது உடல் இயக்கத்துக்குத் தேவையான குளுக்கோஸ், எமது உடற் கலங்களுக்குள் உடைக்கப்பட்டுப் பெறப்படுகிறது. குருதியில் உள்ள குளுக்கோஸ் உடற்கலங்களுக்குள் செல்ல உதவுவது உணவுப்பாதையுடன் தொடர்பாக இருக்கும், சதையி (Pancreases) எனும் சுரப்பியால் சுரக்கப்படும். 'இன்சுலின்' எனப்படும் ஓமோன் ஆகும்.

இன்சுலின் உடலில் தொழிற்படாது விடுவதால் அல்லது, இன்சுலின் சுரக்கும் அளவு குறைவதால் குருதியிலுள்ள குளுக்கோஸ் உடற்கலங்களுக்குள் செல்வது தடைப்படும். இதனால் குருதியில் குளுக்கோஸின் அளவு கூடுகிறது. சாதாரணமாக சிறுநீரகங்கள் குளுக்கோஸை சிறுநீருடன் வெளியேற்றுவதில்லை.

குருதியில் குளுக்கோஸின் அளவு கூடும் போது அதாவது 100ml குருதியில் குளுக்கோஸின் அளவு 180mg ற்கு மேலாகக் கூடும்போது, சிறுநீரகங்கள் மேலதிக குளுக்கோஸை சிறுநீருடன் வெளியேற்றுகின்றன. இதனை சிறுநீரில் சீனி இருக்கிறது எனக் குறிப்பிடுகிறோம். இவ்வாறு சிறுநீருடன் குளுக்கோஸ் போகும் போது, உடலிலிருந்து அதிகம் நீரும் சேர்ந்தே வெளியேறும். இதனால் வழமையிலும் பார்க்க அதிகளவு சிறுநீர் உண்டாவதால், அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனாலேயே இதை நீரிழிவு என்கிறோம்.

நீரிழிவு நோயின் அறிகுறிகள்

அடிக்கடி சிறுநீர் கழித்தல், வழமைக்கு மாறாக இரவிலும் பல தடவை சிறுநீர் கழிக்க வேண்டிய நிலை ஏற்படல்.

2 அடிக்கடி தாகம் ஏற்படல்.

3. அசாதாரண பசி ஏற்படல்.

4. உடல் சோர்வாக இருத்தல்.

5. உடல் நிறை குறைந்து கொண்டு போதல்.

6. தலை சுற்றுதல்,மயக்கம் போன்றன அடிக்கடி ஏற்படல்.

7. கை, கால்களில் விறைப்புத் தன்மை ஏற்படுதல்.

8. தேகத்தில் பருக்களும் கட்டிகளும் தோன்றல்.

9. ஆண், பெண் இனப்பெருக்க உறுப்புகளில் ,கூடிய அழற்சி ஏற்படல்.

10. கண் பார்வை குறைவடைதல்.

11. புண்கள் ஏற்படின் அவை ஆறுவதற்கு வழமையிலும் கூடிய நாள்கள் எடுத்தல்.

12. எளிதில் கோபமடைதல்.

மேற்குறிப்பிட்ட அறிகுறிகளில் சிலவற்றை, நீங்கள் அவதானித்தால், அருகிலுள்ள வைத்திய சாலைக்குச் சென்று சிறுநீர்ப் பரிசோதனை செய்வதன் மூலம், அந்நோய் இருக்கின்றதா என்பதை அறிந்து கொள்ளலாம். பின்பு, இரத்தப் பரிசோதனை செய்வதன் மூலமே, இந்நோயை நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

நீரிழிவு நோய் காணப்படுமிடத்து டொக்டரை அணுகி உரிய சிகிச்சை முறைகளை மேற்கொள்ளல் அவசியமாகும். பொதுவாக நீரிழிவு நோயை நான்காக வகைப்படுத்தலாம். இந்த நான்கு வகையான நீரிழிவு நோய் வகைகளே, தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தவர்களில் 98 சதவீதமானவர்களை பாதிப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

முதல் வகை நீரிழிவு நோய் என்பது பெரும்பாலும் குழந்தைகளை தாக்கும் தன்மை கொண்டது. குழந்தை பிறந்தது முதல் 30 வயது வரை தாக்கும் தன்மை கொண்டது. இந்த முதல் வகை நீரிழிவு நோயைப் பொறுத்தவரை, இது ஒருவருக்கு வந்தால், அவருக்கு ஆயுட்காலம் முழுமைக்கும் இன்சுலின் ஊசிமூலம் குளுக்கோஸின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது சிறந்த வழியாகக் கூறப்படுகின்றது.


உலகளாவிய ரீதியில் எண்ணிக்கை அடிப்படையில் பெரும்பாலானவர்களை பாதிப்பது இரண்டாவது வகை நீரிழிவு நோயாகும். பெற்றோருக்கு நீரிழிவு நோய் இருந்தால் அவர்களின் பிள்ளைகளுக்கு நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்புகள் 80 சதவீதம் இருக்கிறது. தவிர கூடுதல் உடல் பருமன், அதிகபட்ச கொழுப்புச் சத்துள்ள உணவுகள் சாப்பிடுவது, உடற்பயிற்சியற்ற வாழ்க்கைமுறை போன்ற காரணிகள் முக்கிய பங்காற்றுகின்றன.

மூன்றாவது வகையான கர்ப்பகால நீரிழிவு நோய். சில பெண்களுக்கு கர்ப்பகாலத்தில் தற்காலிகமாக வருவது. கர்ப்பகாலத்தில் பெண்களின் உடல் எடை அதிகரிப்பதாலும், கருவில் இருக்கும் குழந்தையின் வளர்ச்சி காரணமாகவும், பெண்களுக்கு கூடுதலாக இன்சுலின் தேவைப்படுகிறது. அதனால் அவர்களின் இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு அதிகரித்து, நீரிழிவு நோய் ஏற்படுகிறது. இவர்களின் கர்ப்பத்தின் இறுதியில் குழந்தை பிறந்ததும் பலருக்கு நீரிழிவு நோய் இல்லாது போய்விடும்.

நான்காவது வகையான நீரிழிவு, சதையியில் ஏற்படும் கற்கள் காரணமாக உருவாகிறது. இது உருவாவதற்கு போஷாக்கின்மை உள்ளிட்ட பல்வேறு வகையான சுற்றுப்புற காரணங்கள் இருப்பதாக கூறப்பட்டாலும், இதற்கான பிரதான காரணி எது என்பது குறித்து இன்னமும் ஆய்வுகள் தொடர்கின்றன.

மனிதகுலத்தில் எண்ணற்ற நோய்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டாலும் மனிதனின் உடலை சிறிது சிறிதாக பாதிப்புக்கு உள்ளாக்குவது, நீரிழிவு நோய்தான். நீரிழிவு நோயை கட்டுப்படுத்த என்னதான் வழிமுறைகளை எடுத்துக் கொண்டாலும், அதனை வராமல் தடுப்பதிலேயே அதிகம் கவனம் செலுத்த வேண்டும் என்பதே ஆரோக்கிய வாழ்வின் அடிப்படை உண்மையாகும்.

# பட்டினியைப் போக்க ஒன்றிணைவோம்



நாட்டில் பட்டினியைப் போக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் வந்துள்ளதாக பிரதமர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

உணவுப் பாதுகாப்பு, போசாக்கு தொடர்பில் இரத்தினபுர மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வேண்டிய எந்தவோர் இடங்களிலும் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளாதிருக்க வேண்டாம். இதற்கு அதிகாரிகள் தடைகளை ஏற்படுத்தக்கூடாது. எமக்குள்ள இடங்களில் நாம் உணவுகளுக்கு தன்னிறைவடைய முடியும். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சவாலை வெற்றிக்கொள்வதற்கான வாய்ப்பு எமக்குக் கிடைத்துள்ளது என்றார்.

டொலர்களை சேமிக்கவே நாம் பார்க்கிறோம். அதுபோல விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான உரங்களை அரசாங்கத் தலையீட்டுடன் வழங்குவதற்கும் நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். கடந்த பெரும்போகத்தைவிட இம்முறை அதிகளவான இடத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது என்றார்.

# போலி எம்.பி தொடர்பில் விசாரணை

பாராளுமன்ற உறுப்பினரின் பணியாட் தொகுதியைச் சேர்ந்தவர்கள் என போலியான அடையாள அட்டையைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்டுவரும் நபர்கள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென பொலிஸாரிடம் பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.

மூன்று சந்தேகநபர்களும் திருகோணமலையில் உள்ள பாராளுமன்ற உறுப்பினரிடம் வேலை செய்வதாக போலியான அடையாள அட்டையை தயாரித்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் டி.எம்.ஷரிப் என்கிற நபரின் கீழ் வேலை செய்வதாக அந்த அடையாள அட்டைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் டி.எம். ஷரிப் என பாராளுமன்ற உறுப்பினர் எவரும் இல்லை என நரேந்திர பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.




# இரு பெண்களுக்கும் நேற்றும் இடையூறு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகே, சிறிதம்ம தேரர் ஆகியோரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென வலியுறுத்தி கொழும்புக்கு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டப் பேரணியாக பெண்கள் இருவருக்குப் பொலிஸாரால் இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இரு பெண்களுக்கும் நேற்று முன்தினம் (12) களுத்துறையிலும் பொலிஸார் இடையூறுகளை ஏற்படுத்தியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து மொரட்டுவையிலிருந்து நேற்று (13) காலை மீண்டும் கொழும்பு நோக்கிய ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பிக்கப்பட்ட நிலையில், பொலிஸார் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளனர். இதனால் அங்குப் பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.



# புத்தகம் எழுதும் கப்ராலே சிறையில் இருக்க வேண்டும்

நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கிய கப்ரால் புத்தகங்களை எழுதுகிறார். ஆனால், நாட்டை மீட்க முன் வந்த இளைஞர்களை கைது செய்யப்படுகின்றனர் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தொடம்கஸ்லந்த தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டை பொருளாதார ரீதியாக வக்குரோத்தடைய முன்நின்ற ராஜபக்ஷக்களுடன் இணைந்து நாட்டின் பொருளாதாரத்தை சூறையாடிய மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் "பொருளாதார கொலையாளிகளுக்கு மத்தியில்" என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.

இந்நாட்டில் ஜனநாயகப் போராட்டத்துக்காக வீதியில் இறங்கிய சங்கைக்குரிய சிறிதம்ம தேரர், வசந்த முதலிகே ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறினார்.

இதுவொரு விசித்திரமான நிலை என தெரிவிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாட்டைப் பொருளாதார ரீதியாக வக்குரோத்தடைய முன்நின்ற சில பிரதான தலைவர்களில் முன் நிலையில் இருந்த ஒருவரான நிவார்ட் கப்ரால், எந்தப் பிரச்சினையும் இல்லாமல் தானும் தனது கும்பலும் செய்த பொருளாதாரக் குற்றங்களைப் பற்றி புத்தகங்கள் எழுதி வருகிறார் என்றார்.

சரி என்றால், பொருளாதார குற்றத்தைச் செய்த கும்பலே சிறையில் இருக்க வேண்டும். ஆனால், பொருளாதாரக் கொலையைத் தடுக்கப் போராடிய குழுவைச் சிறையிலடைத்துள்ளனர்.

நாட்டு மக்கள் தற்போது தேர்தலொன்றையே கோருவதாகவும், அதனைப் பெறுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி போராடும் எனவும் கூறினார்.



அரசியலமைப்புப் பேரவைக்கான உறுப்பினர்கள் நியமனம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41அ உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தாபிக்கப்படவுள்ள அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர்களின் நியமனம் தொடர்பாக பரிசீலிப்பதற்காக பகிரங்க வாழ்வில் அல்லது உயர் தொழிலில் தமக்கென்று சிறந்த நிலையை ஏற்படுத்திக் கொண்ட கீர்த்தி வாய்ந்தவர்களும் நேர்மையுடையவர்களும் அத்துடன் ஏதேனும் அரசியற் கட்சியின் உறுப்பினரல்லாதவர்களுமான ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பங்கள் (www.parliament.lk என்னும் பாராளுமன்ற இணைய தளத்தில் காணப்படும் மாதிரிபடிவத்துக்கு இணங்க தயாரிக்கப்பட்டு) சுயவிபரப் படிவத்துடன்,

பாராளுமன்ற செயலாளர் நாயகம்
இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே

எனும் முகவரிக்கு 2022 நவம்பர் 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரசியலமைப்புப் பேரவைக்கான உறுப்பினர்கள் நியமனம்" எனக் குறிப்பிடவும்.
பாராளுமன்ற கௌரவ சபாநாயகரின் கட்டளையின் பிரகாரம் வெளியிடப்பட்டது.

பாராளுமன்ற செயலாளர் நாயகம்
இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே
2022.11.13

# அட்டைப் பண்ணைகளை அகற்றக் கோரி தொடர் போராட்டம்

## 45 ஆவது நாளாகவும் வாழ்வாதாரத்துக்காகப் போராடும் கிராஞ்சி மக்கள்

சுப்பிரமணியம் பாஸ்கரன்




கிளிநொச்சி, கிராஞ்சி இலவங்குடா கடற்பகுதியில் பாரம்பரிய தொழில் நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமைக்கப்பட்டுள்ள அட்டைப் பண்ணைகளை அகற்றக் கோரி, தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள், நேற்று (13) 45 ஆவது நாளாகவும் தங்களுடைய போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்தனர்.

பூநகரி பிரதேசத்துக்கு உட்பட்ட இலவங்குடா கடற்பரப்பில் தங்களுடைய பாரம்பரிய தொழில்களை மேற்கொள்வதற்கு இடையூறாக அமைக்கப்பட்டிருக்கின்ற அட்டைப் பண்ணைகளை அகற்றி, தாம் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்ற வழி வகைகளை செய்து தருமாறு கோரி, செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி முதல் இரண்டு நாள் உண்ணாவிரதப் போரட்டத்தை முன்னெடுத்த கடற்றொழிலாளர்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பலவற்றின் கோரிக்கைகளை அடுத்து, கவனயீர்ப்பு போராட்டமாக முன்னெடுத்தனர்.

இது தொடர்பாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பல்வேறு இடங்களிலும் முறைப்பாடுகளை தெரிவித்திருந்த நிலையில், அவற்றை ஒரு வார காலத்துக்குள் அகற்றித் தருவதாக தெரிவித்திருந்த போதும் இதுவரை அட்டைப்பண்ணைகளை அகற்றித் தரவில்லை என்றும் அட்டைப் பண்ணைகளை அகற்றி தமது தொழில் நடவடிக்கைகளுக்கு வழிவகை செய்து தரும் வரை தொடர்ந்தும் தாங்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.



# மாந்தை கிழக்கு பிரதேச சபையில் வாசிப்பு மாத நிகழ்வு



மாந்தை கிழக்கு பிரதேச சபையில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு, மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் மகாலிங்கம் நந்தன் தலைமையில் நடைபெற்றபோது, நிகழ்வின் பிரதம விருந்தினராக இ. யசிந்தன் (உள்ளூராட்சி உதவி பிராந்திய ஆணையாளர்-முல்லைத்தீவு) சிறப்பு விருந்தினர்களாக அ. அமிர்தலிங்கம் (தவிசாளர், துணுக்காய் பிரதேச சபை) ஆகியோரும் கௌரவ விருந்தினராக த. ஜெயக்குமார் (சமூக சேவை செயற்பாட்டாளர்), பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி சத்தியா ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

வாசிப்பு மாதத்தில் இடம்பெற்ற போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

செ. கீதாஞ்சன்

# யாழில். போலி உறுதி முடிப்பு

## சட்டத்தரணி உள்ளிட்ட 09 பேர் மறியலில்

எம். றொசாந்த்

போலி உறுதி மூலம், காணி மோசடி இடம்பெற்றமை தொடர்பான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சட்டத்தரணி உட்பட ஒன்பது பேரையும் விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் திருமதி நளினி சுபாஸ்கரன் கட்டளையிட்டார்.

யாழ்ப்பாணம் மாநகர் அராலி வீதி, பொம்மைவெளி பகுதியில் உள்ள காணியை அதன் இறந்து விட்ட உரிமையாளர்களான தம்பதியின் போலிக் கையொப்பங்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட உறுதியால், மோசடியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டது. அது தொடர்பாக, யாழ்ப்பாணம் சிறப்பு குற்ற விசாரணைப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை நடத்திய பொலிஸார், இந்த வழக்குடன் தொடர்புடைய உறுதியை நிறைவேற்றிய நொத்தாரிசான சட்டத்தரணி ஒருவரும் மற்றைய சந்தேக நபரான யாழ்ப்பாணம் பிரபல கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி கையூட்டு குற்றச்சாட்டில் சிக்கிக்கொண்டு பதவியில் இடைநிறுத்தப்பட்ட ஒருவரும் கைது செய்யப்பட்டார்கள். அத்துடன் மேலும் ஏழு பேர் கைது செய்யப்பட்டனர்.

வழக்குடன் தொடர்புடைய 09 பேரும் வெள்ளிக்கிழமை (11) யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். யாழ்ப்பாணம் சிறப்பு குற்ற விசாரணைப் பிரிவினர், புலன் விசாரணைகள் நிறைவடையாத நிலையில் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க விண்ணப்பம் செய்தனர்.

சந்தேக நபர்கள் 9 பேர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், பிணை விண்ணப்பத்தை முன்வைத்து, இந்த வழக்கின் புலன் விசாரணைகளை முன்னெடுத்து குற்றச்சாட்டுகளை முன்வைக்க, சட்ட மா அதிபரின் ஆலோசனை பெறப்படவேண்டும். அந்த படிமுறைகளை முன்னெடுக்க நீண்ட காலமாகும். அதனால் சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்க வேண்டும்" என சாரப்பட நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.


இரு தரப்பு சமர்ப்பணங்களை ஆராய்ந்து, எதிர்வரும் 21ஆம் திகதி கட்டளை வழங்கப்படும் என்று தவணையிட்ட மன்று, அன்றுவரை சந்தேக நபர்கள் 9 பேரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

குருநகர் யாகப்பர் தேவாலயத்தின்

# படுகொலையின் 29ஆம் ஆண்டு நினைவேந்தல்

எம். றொசாந்த்






யாழ்ப்பாணம், குருநகர் புனித யாகப்பர் தேவாலயம் மீதான விமான தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 29ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று (13) நடைபெற்றன.

தேவாலயத்தில் காலை திருப்பலியின் நிறைவில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன. இதன்போது உயிரிழந்தவர்களின் உறவினர்கள் உள்ளிட்டோர் சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி காலை திருப்பலி வழிப்பாட்டுக்கு மக்கள் கூடியிருந்த வேளை, இலங்கை விமான படையின் 'சுப்பர் சொனிக்' விமானங்கள் தேவாலயத்தின் மீது குண்டு வீசியதில் தேவாலயத்தில் வழிப்பாட்டில் ஈடுபட்டிருந்த 08 வயது சிறுமி உள்ளிட்ட 13 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் 25க்கும் அதிகமானோர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

சிறுமியை திருமணம் செய்து கொடுக்க மறுத்ததால்

# வீட்டுக்கு தீவைத்த வன்முறை கும்பல்

எம். றொசாந்த்



ஏழாலை பகுதியில் நான்கு பேர் கொண்ட வன்முறை கும்பலால் வீடு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. குறித்த வீட்டுக்குள் வியாழக்கிழமை (10) உட்புகுந்த நால்வர் அடங்கிய வன்முறை கும்பல், வீட்டில் இருந்தோரை அச்சுறுத்தி வீட்டுக்கு தீ வைத்துள்ளனர்.

வீடு முழுவதும் தீ பரவியதில், வீட்டில் இருந்த முக்கிய ஆவணங்கள் உட்பட பெறுமதியான பொருட்கள் அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன. குறித்த வீட்டில் வசிக்கும் 15 வயதான சிறுமியை, திருமணம் செய்து தருமாறு இளைஞன் ஒருவர் வற்புறுத்தி வந்ததாகவும், அதற்கு வீட்டார் சம்மதிக்காத நிலையில், இளைஞனின் குழுவால் மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வந்த நிலையில், அந்த குழுவினரே வீட்டுக்கு தீ வைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொத்துவிலில் ஏட்டிக்கு போட்டியாக சம்பவங்கள்

# அரசியலுக்காக இன உறவை சீர்குலைக்க சதி

வி.ரி சகாதேவராஜா

நாட்டில் விரைவில் தேர்தல்கள் வரவிருக்கின்றன. அதற்காக அரசியலை முன்வைத்து, இனங்களிடையே முரண்பாட்டை தோற்றுவிப்பதற்கு சில வங்குரோத்து இனவாதிகள் தூபமிடுகிறார்கள். அதற்கு நாம் ஒருபோதும் இடமளியோம் என்று பொத்துவில் பிரதேச சபையின் உப தவிசாளரும் சமூக செயற்பாட்டாளருமான பெருமாள் பார்த்திபன் தெரிவித்தார்.

பொத்துவில், சின்னவட்டிவயலில்உள்ள காணியை அபகரிக்கும் நோக்கில் எழுந்துள்ள சதி தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று (13) பொத்துவிலில் நடைபெற்றது. இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் ஜெயசிறில், மாணவர் மீட்பு குழுத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான செல்வராஜா கணேஷ் உட்பட ஆலயங்களின் வண்ணக்கர்மார், விகாராதிபதிகளும் கலந்துகொண்டார்கள் உதவி தவிசாளர் பார்த்திபன் மேலும் தெரிவிக்கையில், பொத்துவிலில் ஏனைய இனங்கள், கடந்த காலங்களில் அரசநிலங்களையும் தமிழர்களின் பூர்வீக காணிகளையும் எவ்வாறு அபகரித்து, தமது வணக்கதலங்களுக்கு எடுத்துக் கொண்டார்கள் என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்படும்போது, இனமுரண்பாட்டை தூண்டிவிடக்கூடாது என்பதற்காக நாங்கள் அமைதியாக இருந்தோம். ஆனால், இன்று எமது உறுதிக்காணிகளில் கைவைக்க முன்வந்துள்ளனர். இனியும் நாங்கள் அமைதிகாக்க முடியாது. அதற்காகவே இங்கு குரல் எழுப்புகின்றோம்.

குறித்த காணி தொடர்பில், வர்த்தமானி அறிவித்தல் தொடக்கம் சகல உறுதி ஆவணங்களும் உள்ளன. மட்டக்களப்பு - பொத்துவில் பிரதான வீதியில் உள்ள பொத்துவில் சின்ன வட்டிவயல், 17 ஏக்கர் காணியை 1920 ஆம் ஆண்டு வரை, யாழ்ப்பாணத்தை சேர்ந்த காசிநாதர் வைத்திலிங்கம் மார்கண்டர் பராமரித்து வந்தார். பின்னர், நாவற்குடாவைச் சேர்ந்த வள்ளியம்மை தேவநாயகம் என்பவருக்கு விற்றார்.

அவர், 1938ஆம் ஆண்டு உகந்தமலை முருகன் ஆலயம் உட்பட ஐந்து ஆலயங்கள், 02 பன்சலைகள், 50க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அன்பளிப்பு செய்தார். அதன் பின்னர் இவர்கள் இக் காணியை தொடர்ச்சியாக பராமரித்து வருகின்றனர்; பலர் வீடுகளை அமைத்து வாழ்கின்றனர். கடந்த 84 வருட காலமாக நாங்கள்தான் இதனை பராமரித்து வருகின்றோம்.

உகந்தமலை ஸ்ரீ முருகன் ஆலய காணியை அபகரிக்கும் நோக்கில் இன்று (14) சில இனவாதிகளால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட இருக்கின்றது. அவர்கள், இது பொத்துவில் பொது விளையாட்டு மைதானத்துக்கு உரிய அரச காணி என்று கூறி, பரவலாக நோட்டீஸ் ஒட்டி, அனைவரையும் இதற்காக ஒன்று கூடுமாறும் அழைப்பு விடுத்திருக்கின்றார்கள். இவ்வாறு, ஏட்டிக்குப் போட்டியாக சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இதனால் அங்கு இன உறவு சீர்குலையும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றார்.

# 'சாயம்': வரலாற்றின் மீதான கழிவிரக்கம்



ஆசிரியை ரி. பிரவாகினியின் 'சாயம்' வரலாற்றின் மீதான கழிவிரக்கம் என்ற கைவண்ணக் கலைக்கூடம் திறப்பும் காலத்தின் தேவை கருதிய சிறப்புரையும் திருகோணமலை, செல்லம்மா மண்டபத்தில் சனிக்கிழமை (13), நடைபெற்றது. இந் நிகழ்வில், திருகோணமலையின் தொல்லியல் வரலாற்று பெருமை கூறும் ஓவியங்கள் இடம்பிடித்திருந்தன.

நிகழ்வில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் பிரதம விருந்தினராக பங்கேற்றதுடன் சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை வலயக்கல்வி பணிப்பாளர் ந. விஜேந்திரன், கிழக்கு மாகாண கல்வித் திணைகளத்தின் பிரதிக் கல்வி பணிப்பாளர் ஆர். நிமலரஞ்சன் ஆகியோர் கலந்தது சிறப்பித்தனர்.

செல்லையா தர்மலிங்கத்தால் கலைக்கூடம் திறந்து வைக்கப்பட, வைத்தியர்களான த. ஜீவராஜ், அ. சதீஸ்குமார், இலக்கிய ஆர்வலர் காளிராசா செந்தூரன், கவிஞர் தில்லைநாதன் பவித்திரன் ஆகியோர் அறிமுக உரைகளை நிகழ்த்தினர்.

அ. அச்சுதன்







# திருகோணமலையில் சாரணர் பாசறை

அ. அச்சுதன்

திருகோணமலை விபுலானந்தா கல்லூரியில் வெள்ளிக்கிழமை (11) திருகோணமலை மாவட்ட சாரண ஆணையாளர் சி. சசிகுமார் தலைமையிலும் உதவி மாவட்ட ஆணையார் ரூ. ஜனோச்சின் ஒழுங்குபடுத்தலிலும் திருகோணமலையில் சாரணர் பாசறையும் திறண்விருத்தியும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது.

நிகழ்வின் பிரதம விரருந்தினராக திருகோணமலை மாவட்டக் கிளையின் நிறைவேற்றுக் குழுத்தலைவர் வ. கலைச்செல்வன், சிறப்பு விருந்தினராக திருகோணமலை வலயக் கல்வி அலுவலக கணக்காளர் நிமலேஸ் கலந்து சிறப்பித்தார்கள்.

நிகழ்வில் பாடசாலை ரீதியாக 11 மாணவ குழுக்கள் அடங்கலாக 450 சாரணர்களும், 34 சாரணர் தலைவர்களும், 12 உதவி மாவட்ட ஆணையர்களும் பங்கு கொண்டு பாசறைகளை அமைத்து செயற்பாட்டை முன்னெடுத்திருந்தார்கள்.

இச்சாரணர் பாசறை நேற்று (13) குருளை சாரணர்களின் பங்குபற்றுதலுடன் நிறைவுபெற்றது.

வடக்கு, கிழக்குக்கு போதைப்பொருட்களை கொண்டு வருபவர்கள் அரசாங்கத்துக்கு

# நெருக்கமானவர்களா?

## இரா. சாணக்கியன் எம்.பி கேள்வி

க. விஜயரெத்தினம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு போதைப்பொருட்களை கொண்டுவருபவர்கள் இராணுவத்தினரா, புலனாய்வுத்துறையினரா, அரசாங்கத்துக்கு நெருக்கமானவர்களா என்று தெரியாமல் இருக்கின்றது. கடந்தவாரம் மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது, முன்மொழிவை முன்வைத்தேன். ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாகவும், ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவிலும் போதைப்பொருளை கொண்டு வருபவர்களை அவதானிக்கும் நோக்கில், போதைப்பொருள் கட்டுப்பாட்டு குழுக்களை நியமித்து, போதைப்பொருளை கட்டுப்படுத்தமுடியுமென கோரிக்கையை முன்வைத்தேன். அதற்கான வழிமுறைகளை முன்னெடுக்க மாவட்டத்தின் அரசாங்க அதிபரோ மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரோ ஒத்துழைப்பு வழங்கவில்லை. இப்படியான நிலையில், தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் ஊடுருவியுள்ள போதைப்பொருளை எவ்வாறு கட்டுப்படுத்துவது என இரா. சாணக்கியன் கேள்வி எழுப்பினார்.

பெரியகல்லாறு மத்திய விளையாட்டுக் கழகத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு பெரியகல்லாறு மத்திய விளையாட்டுக்கழத்தின் தலைவர் ஏ. அகிலன் தலைமையில் சனிக்கிழமை (12) நடைபெற்றது.

இந்நிகழ்வில், இரா. சாணாக்கியன் எம். பி தொடர்ந்து உரையாற்றுகையில்...

2001ஆம் ஆண்டு ஆயுதத்தை வைத்து தமிழர்களை அழித்த அரசாங்கம், இன்று போ தைப்பொருளை வைத்து தமிழ்ச் சமூகத்தை அழிக்கின்றது. சமூகத்தில் இருக்கின்ற விளையாட்டுக்கழகங்கள், மாதர் அபிவிருத்தி சங்கம், மதத்தலைவர்கள், ஒன்றிணைந்து போதைப்பொருளை கட்டுப்படுத்துவதற்கு போதியளவு விழிப்புணர்வு வேண்டும் என்றார்



செங்கலடி விவேகானந்தா வித்தியாலய

# மாணவனுக்கு கௌரவம்

வ.சக்தி

தேசிய விஞ்ஞான மன்றத்தால், நடத்தப்பட்ட சிறுவர் இயற்கை ஆர்வலர் போட்டியில், செங்கலடி விவேகானந்தா வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி பயிலும் ஆதவன் அனுன் என்ற மாணவன் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

உலக விஞ்ஞான தினமான வியாழக்கிழமை (10) மேற்படி மாணவனை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும், உலக விஞ்ஞான தின நிகழ்வும் பாடசாலை அதிபர் க.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, பாடசாலை மாணவர்கள் கண்டு பிடித்த பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

## மஹா கும்பாபிஷேகம்



ஹட்டன், சிங்கமலை சுரங்கத்துக்கு அண்மையில் அமைந்துள்ள சுரங்கத்து ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் வெள்ளிக்கிழமை (11) நடைபெற்றது. வெள்ளிக்கிழமை காலை 8.47 முதல் காலை மணி 9.59 வரையான சுபவேளையில் ஸ்ரீ முத்துமரியம்மனுக்கும், ஸ்ரீ வெக்காளியம்மானுக்கும் மஹா கும்பாபிஷேகம் ஆலய அறங்காவலர் ஏ.கெ செல்வம் தலைமையில் நடைபெற்றதுடன், பிரம்மஸ்ரீ ஹரிதேவ் சுந்தர ராஜ பிரபாகர குருக்கள் தலைமையிலான குழு இந்த கும்பாபிஷேகத்தை நடாத்தியது. (எம்.பிரபா)





## பரிசளிப்பு விழா...



கண்டி இரஜவெல்ல இந்து தேசியக் கல்லூரியின் 113 ஆவது பரிசளிப்பு விழா மத்திய மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கல்லூரியின் அதிபர் திருமதி கோகிலேஸ்வரியின் தலைமையில் நடைபெற்ற விழாவில் அதிதிகளாக கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடு அமைப்பு அமைச்சின் பிரஜாசக்தி பணிப்பாளர் பாரத் அருள்சாமி, மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் மதியுகராஜா, பரீட்சைகள் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர், மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர், என பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். எஸ்.கணேசன்





## கண்டனப் போராட்டம்...



உலக உணவுத் தினத்தை முன்னிட்டு, பதுளை தமிழ், சிங்கள பெண்கள் அமைப்புக்கள் பதுளை நகரில் நேற்று (13) கண்டனப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தன. எம்.செல்வராஜா



மஹாஎலியவில் மாணிக்கக்கல் அகழ்வு:

# 25 ஏக்கர் அழிந்தது

ரஞ்சித் ராஜபக்ஷ

சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வால் பொகவந்தலாவை- மஹாஎலிய வனத்தில் 25 ஏக்கர் நிலப்பரப்பு பாரிய அழிவை எதிர்நோக்கியுள்ளதாக ஹோட்டன் சமவெளி தேசிய வனத்துக்கு பொறுப்பாளர் பி.பீ. தயாரத்ன தெரிவித்துள்ளார்.

குறித்த பிரதேசத்தில் ஹட்டன், பொகவந்தலாவை, நோர்வூட், பலாங்கொடை, இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணிக்கக்கல் வர்த்தகர்களால் சட்டவிரோத அகழ்வு முன்னெடுக்கப்படுவதாகவும் இதற்காக தினமும் 200 பேர் வரை அகழ்வு தொழிலில் ஈடுபடுவதாகவும் இதனால் காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு பிரதானமாக நீரை கொண்டு செல்லும் கெசல்கமுவ ஆறும் பாரிய அழிவை சந்தித்துள்ளதாக பி.பீ. தயாரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டுள்ளவர்கள் குறித்த வனப்பகுதியில் தற்காலிக கூடாரங்களை அமைத்து வனத்தில் தங்கியிருந்து அகழ்வில் ஈடுபடுவதுடன் பாரிய மரங்களை அழிப்பதாகவும் தெரிவித்தார்.





சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடுபவர்களை கைதுசெய்வதற்கான விசேட சுற்றிவளைப்பு 12ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட போது, மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், ஏனையவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே, பொகவந்தலாவை மஹாஎலிய பிரதேத்தில் சுற்றாடல், நீர் மாசுவை ஏற்படுத்தி சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடுவதை தடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் காசல்ரீ நீர்த்தேக்கம் பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை கடந்த 12ஆம் திகதி மஹாஎலிய பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, தமது அதிகாரிகள் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வாளர்களால் தாக்குதலுக்கு இலக்காகியதாகவும் எனினும் தமது அதிகாரிகள் அவர்களின் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாமல் சந்தேகநபர்களை கைதுசெய்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



## மண்ணெண்ணெயின் விலை மீண்டும் அதிகரித்தமையால் 'எங்களுக்கு திண்டாட்டம்"

ரஞ்சித் ராஜபக்ஷ

மண்ணெண்ணெயின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் தாம் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுப்பதாக பெருந்தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாளுக்கு நாள் எகிறும் அத்தியாவசியப் பொருள்களின் விலையை தம்மால் தாங்கிக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மண்ணெண்ணெயின் விலை அதிகரிப்பும் பாரிய சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவிக்கின்றனர்.

இந்த மாதம் 11ஆம் திகதி நள்ளிரவிலிருந்து மண்ணெண்ணெயின் விலை 25 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. கடந்த பல மாதங்களாக எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் மண்ணெண்ணெய் விநியோகம் இடைநிறுத்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு மண்ணெண்ணெய் தட்டுபாடுக்கு மத்தியில் சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பை தமது நாளாந்த சம்பளமான 1,000 ரூபாயால் சமாளிக்க முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் கோதுமை மா விலை அதிகரிப்பையடுத்து, பெருந்தோட்டத்தைத் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கமொன்று பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு கோதுமை மாவை மானியம் வழங்குவதாக உறுதியளித்தாலும் இதுவரை தமக்கு எவ்விதமான மானியமும் கிடைக்கவில்லை என்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கவனிக்கப்படாமையால் கால்நடை வளர்ப்பை

## கைவிடும் மக்கள்

துவாரகஷான்



நாட்டின் தற்போதைய நிலையில், பெருந்தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் கால்நடை வளர்ப்பை கைவிட வேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

கால்நடை வளர்ப்பாளர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்து கொடுக்க எவரும் முன்வராமை, பசுப் பாலுக்கான உரிய விலை வழங்கப்படாமை உள்ளிட்ட பல காரணங்களால், பெருந்தோட்டங்களைச் சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்கள் பாரிய அளவில் பாதிப்பை எதிர் நோக்கியுள்ளனர்.

கால்நடைகளுக்கான பிரதான தீவனமான புண்ணாக்கு ஒரு மூடை 6,500 ரூபாய் வரை கடைகளில் விற்கப்படும் நிலையில், தம்மிடமிருந்து ஒரு லீற்றர் பால் 100 அல்லது 105 ரூபாய்க்கே கொள்வனவு செய்யப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனால் அதிகமானவர்கள் தாம் வளர்ந்து வந்த கால்நடைகளை விற்று, கால்நடை வளர்ப்பைக் கைவிட்டுள்ளதால் பெருந்தோட்டங்களில் பாலுக்கு தட்டுபாடு நிலவுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மூளையை இழந்து இருவருக்கு உயிர்க்கொடுத்த மாணவி

ஷேன் செனவிரத்ன



பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பிரிவில் முதலாம் வருடத்தில் கல்வி கற்ற மாணவி, விபத்தொன்றில் உயிரிழந்ததன் பின்னர், அவரின் அவயவங்கள் பொருத்தப்பட்டதன் பின்னர் இருவர் உயிர் பிழைத்துள்ளனர்.

மாத்தறை- தங்கல்ல பகுதியைச் சேர்ந்த லக்சானி கலப்பதி என்ற மாணவி பல்கலைக்கழகத்திலிருந்து விடுதி நோக்கி கடந்த 31ஆம் திகதி சென்றுகொண்டிருந்த போது வாகன விபத்துக்கு முகம்கொடுத்து பலத்த காயங்களுடன் கண்டி தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும், அவரது மூளைச்சாவு அடைந்ததையடுத்து அந்த மாணவியின் உடல் அவயவங்களை நோயாளர்களுக்கு வழங்க அவரது பெற்றோர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய மாத்தளையைச் சேர்ந்த 47 வயதுடைய பெண்ணொருவருக்கும் இரத்தினபுரியைச் சேர்ந்த 27 வயது இளைஞருக்கும் மூளைச்சாவடைந்த மாணவியின் இரண்டு சிறுநீரகங்களும் வெற்றிகரமாக பொருத்தப்பட்டுள்ளதாக கண்டி தேசிய வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கொட்டகலையில்

## இலவச மருத்துவ சிகிச்சை முகாம்

ரஞ்சித் ராஜபக்ஷ

கொட்டகலை பிரதேசத்தில் இலவச மருத்துவ சிகிச்சை முகாமொன்று கொட்டகலை ஸ்ரீ முத்து விநாயகர் மண்டபத்தில் நேற்று (13) நடத்தப்பட்டது.

கொட்டகலை நகர வர்த்தகச் சங்கத்தின் தலைவர் விஸ்வநாதன் புஸ்பா மற்றும் வர்த்தக சங்கத்தின் ஏனைய உறுப்பினர்களால் இந்த இலவச மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொட்டகலை பிரதேச வைத்திய அதிகாரி வைத்தியர் சாவித்திரி சர்மா உள்ளிட்ட வைத்தியசாலையின் ஏனைய வைத்தியர்கள் பணியாளர் சபையினரால் இந்த வைத்தியமுகாம் முன்னெடுக்கப்பட்டது.



இதன்போது கொட்டகலை மற்றும் அதனை அண்மித்த தோட்டங்கள் கிராமபுறங்களைச் சேர்ந்த 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரத்தக்கொதிப்பு, நீரிழிவு பரிசோதனைகள் உள்ளிட்ட பல தொற்றா நோய்கள் தொடபான பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், இலவசமாக மருத்துவ அறிக்கையும் வழங்கப்பட்டது.

இவ்வாறு வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கையை கொட்டகலை வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் காண்பித்து, அவர்களுக்கு தேவையான மருந்துகளை விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஹட்டன்- கொட்டகலை பிரதேசங்களில் உள்ள மக்கள் தொற்றா நோய் தொடர்பான மருத்துவ அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள அதிக நிதியை செலவிடுவதன் காரணமாக அந்த நோயாளர்களுக்கான மருத்துவ அறிக்கை இவ்வாறு இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என கொட்டகலை நகர வர்த்தகச் சங்கத்தின் தலைவர் விஸ்வநாதன் புஸ்பா தெரிவித்துள்ளார்.

கண்டி- புனித அந்தோனியார் மகளிர் கல்லூரியின்

## 3 மாடிக் கட்டடத்துக்கு பெரும் ஆபத்து

ஷேன் செனவிரத்ன

கண்டி- புனித அந்தோனியார் மகளிர் கல்லூரியின் மூன்று மாடிக் கட்டடத்தின் பாதுகாப்பு சுவர் இடிந்து விழுந்துள்ளதுடன், இதனால் கட்டடம் பாரிய ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

தரம் 9, 10 மற்றும் 11 ஆகிய வகுப்புகள் காணப்படும் குறித்த கட்டடத்திலிருந்து மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், அந்த மாணவர்களுக்கு வேறு மாற்று வகுப்பறைகளை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

எனினும், குறித்த கட்டடத்துக்கு புதிதாக பாதுகாப்பு சுவர் ஒன்றை அமைத்து, மீண்டும் அங்கு கற்றல்



செயற்பாடுகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல் பிரிவின் சிரேஸ்ட பேராசிரியர் அதுல சேனாரத்னவிடம் வினவியபோது, இக்கட்டடத்தை மீண்டும் பயன்படுத்துவதற்கு முன்னர், அங்கே பல ஆய்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார்.

## எல்பீங் நுவரெலியா திட்டம் ஆரம்பம்

டி சந்ரு

வறிய குடும்பங்களுக்கு உதவிக்கரம் நீட்ட 'எல்பீங் நுவரெலியா' திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்டத்தில் வறிய குடும்பங்கள் மற்றும் வாழ்வாதாரமும், கற்றலைத் தொடர முடியாத குடும்பங்களுக்கு உதவி கரம் நீட்டுவதற்காக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தலைமையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



நுவரெலியா மாவட்ட செயலகத்தில் கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் (13) இந்த அமைப்பின் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், நுவரெலியாவில் மாவட்ட பிரதேச செயலாளர்கள் , கல்வி பணிப்பாளர்கள், வைத்தியர்கள் மற்றும் நகர சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# பொங்கியெழுந்து சீருடைக்கு கரியை பூசிக்கொண்ட கேவலம்

ஒரு நாட்டில் ஜனநாயகம் பேணப்படவில்லை எனில், சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து இருக்குமாயின், துஷ்பிரயோகங்கள் அதிகரித்து இருக்குமாயின், சமூக விரோத செயற்பாடுகள் தலைத்தூக்கி தாண்டவமாடிக் கொண்டிருந்தால், அந்நாட்டின் மீது உலகத்தின் அவதானம் ஆழ ஊன்றியிருக்கும்.

கோட்டாபய, பசில், மஹிந்த ஆகியோரை பதவிவிலகுமாறு வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், எரிபொருட்களுக்கான வரிசைகளின்போது, பொதுமக்கள் மீதான பொலிஸாரின் கண்மூடித்தனமான தாக்குதல்கள் இடம்பெற்றிருந்தபோது, இலங்கையில் இருக்கும் உயர்ஸ்தானிகராலயங்கள், தூதரகங்கள் தங்களுடைய நாட்டு பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தன.

அதன்பின்னர், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சடுதியாகக் குறைந்தது. எனினும், 2022 ஒக்டோபர் மாதமளவில் வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

கொரோனாவுக்குப் பின்னர் பொருளாதார நெருக்கடிக்குள் விழுந்த எமது நாடு, இன்னுமே மீண்டெழவில்லை. டொலர் பற்றாக்குறையின் தாக்கத்தை ஒவ்வொருவரும் அனுபவித்துக்கொண்டு இருக்கின்றோம். இடைக்கிடையே இருக்கும் விலை அதிகரிப்பு, மரணக்குழிக்குள் தள்ளிவிட முயலுகின்றது.

இவற்றுக்கெல்லாம் இடையில், உரிமை போராட்டங்கள் ஆங்காங்கே முன்னெடுக்கப்படுகின்றன. போராட்டங்களுக்கு சட்டரீதியில் தடைவிதிக்கப்பட்டால் ஒழிய, பொலிஸாரின் அதிகாரத்தை பயன்படுத்தி தடுக்கமுடியாது. எனினும், கொழும்பை நோக்கி பேரணி நடத்திய இரண்டு பெண்களையும், பொலிஸ் உயரதிகாரியொருவர் பெண் பொலிஸாரின் கழுத்தைப் பிடித்து தள்ளிய காட்சிகள் சமூக வலைத்தளங்களில் கடுமையான விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

யாராக இருந்தாலும் மற்றையவரின் மூக்கு வரை மட்டுமே விரலை நீட்டமுடியும். தாக்குவதற்கு எவருக்குமே உரிமையில்லை. இந்தக் காட்சிகளை வெளிநாட்டவர்கள் பார்த்தால், தங்களுக்கும் எவ்விதமான பாதுகாப்பும் இல்லையென நினைத்து, எமது நாட்டு பக்கமே தலைவைத்துப் பார்க்கமாட்டார்கள். இது சுற்றுலாத்துறைக்கும், நாட்டின் பொருளாதாரத்துக்கும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

பொலிஸ் இணையத்தளத்தில், 'எங்கள் நோக்கம்' எனும் தலைப்பின் கீழ், "நாட்டின் சட்டத்தை நிலைநிறுத்துவதற்கும் அமல்படுத்துவதற்கும், பொது ஒழுங்கைப் பாதுகாப்பதற்கும், குற்றம் மற்றும் பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கும், யாருக்கும் சமத்துவம் இல்லாத வகையில் - இலங்கை பொலிஸ் அர்ப்பணிப்புடனும் நம்பிக்கையுடனும் உள்ளது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றுவோரில் பலர், தங்களுடைய தொழில்தர்மத்துக்கு பங்கம் விளைவிக்கக்கூடாது என்பதில் மிகக்கவனமாக இருக்கின்றனர். இன்னும் சிலர், அதிகாரத்தை கையிலெடுத்து, பொங்கியெழுந்து சீருடைக்கு கரியைப் பூசிக்கொள்கின்றனர். பதவியேற்றபோது செய்யும் சத்தியப்பிரமாணத்தை மறந்துவிடுகின்றனர். இது முழு பொலிஸாருக்கும் அவமானமாகும்.

சட்டம், ஒழுங்கை காக்கவேண்டியது பொலிஸாரின் கடமையாகும். ஆக, எதிர்காலத்திலாவது சட்டத்தை கையிலெடுக்காது, எச்சரிக்கையாக இருக்கவும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136



Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

ஒருநாளும் தெரியாதவர்களுடன் கூட மோதுகின்றார்கள். பொதுஇடங்களில், பஸ்கள், விழாக்கள், சந்தைகளில் கண்டபடி வாக்குவாதம் செய்கின்றார்கள். மிகமோசமாகச் சண்டையிடுகின்றார்கள்.

பகைமை எப்படித் திடீரென முற்றுகின்றது? பலர் பார்க்கும்போது, வெட்கமே இல்லாமல், ஆணவத்துடன் செயற்படுதல் மனிதமற்ற செயலாகும்.

பொதுஇடங்களில், கூட்ட நெரிசலில் முந்திக்கொள்ள முனைவார்கள். இதன்போது வாக்குவாதம் ஏற்படும். அப்புறம் சண்டைதான். இன்னும் சிலர், தெருவால் போகின்றவர்களை வேண்டுமென்றே கேலி செய்வார்கள். கேட்பவர்கள் விடுவார்களா? மோதல் வெடிக்கும்.

திருமண வீடுகளில் சிலர் அநாகரிகமாக நடந்துகொள்வார்கள். ஏதாவது சின்ன விடயங்களைப் பெரிதாக்கி, வார்த்தைப் பிரயோசனங்களை நெருப்பாக வீசுவார்கள்.

சந்தோசம் சிலருக்குப் பிடிப்பதே இல்லை. விழாக்களில் அரசியல் பேசி, சிலர் தங்கள் கட்சியே பெரிதென விவாதிப்பார்கள். அதுவே, கலிங்கத்துப் போர் போலாகிவிடும். வெட்கமே இல்லையா?

எந்த விழாவுக்கும் பொலிஸாரை வரவழைக்க வேண்டியுள்ளது. ஆணவத்தை அடக்குக; பொறுமையாக இருங்கள்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### ஆறு மாதங்களாக எட்டியும் பார்க்காத கிராம சேவையாளர்

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட காஞ்சிபுரம் பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தால் 32 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை பெய்த பலத்த மழை காரணமாக, சில வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது. இதனால் மக்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். இதேவேளை, போக்குவரத்து செய்வதிலும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த கிராமத்தை ஆறு மாதங்களாக கிராம சேவையாளர் கண்காணிக்கவில்லை எனவும், வெள்ளம் தொடர்பில் அறிவிக்க அழைப்பு ஏற்படுத்திய போதும், அழைப்பை ஏற்கவில்லை எனவும் மக்கள் குற்றச்சாட்டுகின்றனர்.

இந்த நிலையில், பிரதேச செயலாளருக்கு மக்கள் தகவல் வழங்கிய நிலையில், கள விஜயம் மேற்கொண்ட கண்டாவளை பிரதேச செயலாளர் த. பிருந்தாகரன் நிலைமைகள் குறித்து ஆராய்ந்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு 'உலக தரிசனம்' நிறுவனத்தின் உதவியுடன் உடனடி உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது. வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், உறவினர் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில், வெள்ள நீர் தேங்காத வகையில் வடிகான்களை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

யது பாஸ்கரன்



அடுத்த வருடம் பெப்ரவரிக்குள்

# இனப்பிரச்சினைக்கான தீர்வு?



என்.கே அஷோக்பரன்

Twitter: @nkashokbharan

நவம்பர் மாதம் 10ஆம் திகதி, பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "இலங்கையின் உள்விவகாரங்களில், வெளியார் தலையீடு தேவையில்லை. நாட்டின் தமிழ் சிறுபான்மையினர் எதிர்நோக்கும் நிலுவையில் உள்ள சில பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில், அடுத்த வாரம் பேச்சுவார்த்தை நடத்த, சிறுபான்மையின கட்சியினருக்கு அழைப்பு விடுத்துள்ளேன்" எனத் தெரிவித்திருந்தார்.

"அடுத்த வாரம் பேச்சுவார்த்தை நடத்தி, 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் நிலுவையில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கு, நான் உங்கள் அனைவரையும் அழைக்கிறேன்" என்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கூறினார்.

பிரித்தானியாவிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற 75ஆவது ஆண்டு நிறைவை 2023 பெப்ரவரி நான்காம் திகதி கொண்டாடவுள்ள நிலையில்தான், ரணில் விக்கிரமசிங்க இந்த அழைப்பை விடுத்திருந்தார்.

அத்தோடு, "எங்கள் நாட்டின் விவகாரங்களில் மற்றவர்கள் தலையிடத் தேவையில்லை. எங்கள் பிரச்சினைகளை நாங்கள் தீர்க்க முடியும்; அதைத்தான் நாங்கள் நிறைவேற்ற முயலுகின்றோம்" என்று, எந்த நாட்டின் பெயரையும் குறிப்பிடாமல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தமையும் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்திருந்தது.

"இனப்பிரச்சினையா... அப்படியென்றால் என்ன? அப்படியொன்று இருக்கிறதா? நாம் அனைவரும் ஒரு தேசம்; நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள். இங்கு சிறுபான்மையினர் என்று யாரும் கிடையாது. அகராதியில் சிறுபான்மையினர் என்ற சொல்லே கிடையாது" என்று பொய்க் கற்பிதங்களை பகட்டாரவாரமாகச் சொல்லும் இலங்கை அரசியல்வாதிகளிடையே, "இங்கு சிறுபான்மையினருக்கு பிரச்சினைகள் இருக்கின்றன. அவை தீர்க்கப்பட வேண்டும். அது, 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் அடையப்பட வேண்டும்" என்று இந்நாட்டின் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் பேசியதும், தமிழர் தரப்புக் கட்சிகளை இதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு அழைத்திருப்பதும் நல்ல மாற்றம்தான்.

இந்தப் பேச்சினூடாக, இலங்கையில் இனப்பிரச்சினை இருப்பதை நேரடியாகவோ, மறைமுகமாகவோ இலங்கையின் ஜனாதிபதி அங்கிகரித்துள்ளதுடன், அது விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என்பதையும் பதிவு செய்திருக்கிறார்.

இது மஹிந்த, கோட்டா, சஜித் ஏன் அநுர ஜனாதிபதியாகி இருந்தால் கூட இடம்பெற்றிருக்காது. மஹிந்தவும், கோட்டாவும் "இனப்பிரச்சினையா, அப்படியென்றால் என்ன? நாம் அனைவரும் இலங்கையர்கள்" என்பார்கள்.

சஜித், "என் அகராதியில் சிறுபான்மை என்ற சொல்லே இல்லை" என்பார்.

ஜே.வி.பி எனும் பெரும்பான்மையின இனவாதத்தை அடிநாதமாகக் கொண்ட இடதுசாரிக் கட்சியின் தலைவர் அநுர, "இங்கு இனவாதம் என்பது, முதலாளித்துவத்தின் வேலை; இங்கு இனங்கள் கிடையாது; வர்க்கங்கள்தான் இருக்கின்றன" என்பார்.

ஆகவே, இவர்கள் எவரும் இத்தனை காலத்தில் தாமாக முன்வந்து அங்கிகரிக்காத ஒரு பிரச்சினையின் இருப்பை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கிகரித்திருக்கிறார். நன்று!

இந்தப் பேச்சுவார்த்தைகள், தமிழர் தரப்புக்கு ஒரு மிகப்பெரிய வாய்ப்பு. இதனை தமிழர் தரப்பு மிகக்காத்திரமான வகையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு முதற்படியாக, தமிழர் தரப்பு, தமது கட்சி அடிபாடுகளைக் கடந்து, குறைந்தபட்ச கொள்கை அடிப்படைகளிலேனும் ஒன்றுபட்டு, ஒரு குரலாகப் பேச வேண்டியது காலத்தின் தேவையாகிறது.

இந்த இடத்தில், தமிழர் தரப்பும் ஒன்றை நினைவில் வைத்திருத்தல் அவசியமாகிறது. எப்படி மேற்சொன்னதைப்போல, மஹிந்த, சஜித், அநுர ஆகியோரது கருத்துகள் பகட்டாரவார அபத்தமான கருத்தாக தமிழர்களால் பார்க்கப்படுகிறதோ, அதைப்போல, தமிழர் தலைமைகளுக்கு பகட்டாரவார அபத்தங்களைத் தவிர்த்துவிட்டு, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, சுமூகமாகதொரு தீர்வை எட்ட முயல வேண்டும்.

பேச்சுவார்த்தை மேசையென்பது, தேர்தல் மேடையல்ல. அது மக்களிடம் கைதட்டு வாங்குவதற்கான இடம் அல்ல. அது, தான் என்ற ஆணவமும் 'ஈகோ'வும் ஆட்டம் போடும் இடமல்ல. அது வழக்காடும் இடமும் அல்ல. பேச்சுவார்த்தை மேசையென்பது காரியத்தை சாதிக்கும் இடம்; சமரசத்துக்கான இடம்.

இந்த இடத்தில் சௌமியமூர்த்தி தொண்டமான், வடக்கு-கிழக்கு தமிழர் தலைமைகளைப் பற்றி முன்னர் சொன்ன ஒரு விடயம் கவனத்தில் கொள்ளத்தக்கது. "பேச்சுவார்த்தைக் கலையானது, ஐந்து கோரிக்கைகளை முன்வைத்தல்; அதில் ஒன்றை முழுமையாக வெற்றி கொள்ளுதல். இரண்டைப் பகுதியளவில் வெற்றி கொள்ளுதல். இரண்டைத் தற்காலிகமாக வேறொரு நாளுக்குக் கிடப்பில் வைத்தல்" என்று சொன்னார். "நாங்கள் தொழிற்சங்கவாதிகள்; ஆதலால் எமக்கு இந்தப் பேச்சுவார்த்தைக் கலை தெரியும். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் பெரும்பாலானோர் சட்டத்தரணிகள். அவர்களுக்கு வழக்கை மிகச் சிறப்பாக வாதாடத் தெரியுமே அன்றி, சலுகைகளைப் பெற்றுக்கொள்ளத் தெரியாது" என்று சொன்னார்.

"பயத்தின் காரணமாக ஒருபோதும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டாம். ஆனால், பேச்சுவார்த்தைக்கு ஒருபோதும் பயப்பட வேண்டாம்" என்றார் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜே.எப் கென்னடி.

தமிழர் தரப்பு இன்று எதற்கும் அஞ்சாமல், தமிழ் மக்களின் ஏகோபித்த நலனை மட்டும் முன்னிறுத்தி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட ஒரு சந்தர்ப்பம் உருவாகியிருக்கிறது. அதைத் தமிழர் தரப்பு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். தனிநபர் ஈகோக்களால், இந்நாட்டின் மக்கள் அனைவருக்கும் கிடைக்கக்கூடியதொரு நன்மை கிடைக்காது போய்விடக்கூடாது.

அதேவேளை இது, வரலாற்றில் இன்னோர் ஏமாற்றமாகவும் அமைந்துவிடக்கூடாது. ஆகவே, தமிழர் தரப்பு இதனை மிகச்சரியாகவும், மிக இலாவகமாகவும் கையாளுதல் அத்தியாவசியமாகிறது. கட்சி நலன், தனிநபர் நலன்கள் என்பவற்றைத்தாண்டி தமிழ் மக்களின் பிரதிநிதிகள் சிந்திக்கவும், செயற்படவும் வேண்டிய தருணம் இது.

மேலும், இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் அந்நியத் தலையீடு தேவையில்லை என்பதை ஜனாதிபதி தெளிவாக அழுத்திச் சொல்லவும் காரணம் இருக்கிறது. இலங்கையின் இனப்பிரச்சினை இலங்கையில் அந்நியர்கள் தலையீடு செய்வதற்கான துருப்புச் சீட்டாக மாறியிருக்கிறது.

குறிப்பாக, இந்தியாவானது, இலங்கையில் தலையீடு செய்வதற்கான துருப்புச் சீட்டாக இனப்பிரச்சினையைப் பயன்படுத்திய வரலாறு இன்னும் இந்நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பினராலும் மறக்கப்படவில்லை. இந்திய சமாதானப் படை, இந்த மண்ணில் கட்டவிழ்த்து விட்ட அட்டூழியங்களை மக்கள் மறக்கமாட்டார்கள். இன்றும் பிரதான தமிழ் அரசியல் கட்சிகளை இந்தியா ஆட்டுவித்து வருகிறது என்ற குற்றச்சாட்டு, பரகசியமான இரகசியமாக பேசப்படுகிற விடயம்.

பிரதான தமிழ்க் கட்சிகள் எந்தவொரு முக்கிய முடிவையும் இந்தியாவுடன் கலந்தாலோசிக்காது எடுப்பதில்லை என்பதும் பரகசியமான இரகசியமாகும். ஆகவேதான், ஜனாதிபதி தமிழ்த் தரப்பை பேச்சுவார்த்தைக்கு அழைத்தபோது, அந்நியத் தலையீடு தேவையில்லை என்பதையும் அழுத்திச் சொல்லியிருக்கிறார்.

இலங்கைக்கு இந்தியா உதவி செய்திருக்கிறது. இந்தியா, தமிழ் மக்களுக்கு உதவி செய்திருக்கிறது. அது உண்மை. ஆனால், அந்த உதவிகளுக்குப் பின்னால் மனித நேயமும் தமிழ் மக்கள் மீதான பாசமும் அக்கறையும் மட்டும்தான் இருக்கிறது என்று எண்ணினால் அது தவறு.

'இந்திய நலன்' என்பதுதான் இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கியமான அடிப்படை. அந்த அடிப்படையை மறைமுகமாகப் பாதிக்கிற எந்த காரியத்தையும் இந்தியா செய்யாது. இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு, அதன் வழிமுறைகள் பற்றியெல்லாம் இந்தியாவுக்கு மிகுந்த அக்கறை இருப்பதற்கான முக்கிய காரணம், இலங்கையின் அமைவிடம்.

அதிலும், இலங்கையின் வடக்கு, இந்தியாவுக்கு அமைவிட ரீதியில் மிக நெருக்கமாக அமைந்துள்ளதோர் இடம். வடக்கின் மீது தன்னுடைய ஆதிக்கத்தை இந்தியா எப்போதும் வைத்திருக்கவே முனையும்.

அதேவேளை, தமிழ்த் தலைமைகள் இந்தியாவுடன் நல்லுறவைப் பேணலாம்; (பேண வேண்டும்!). ஆனால், சரணாகதி நிலையில் இருந்து இயங்கும் மனநிலையை மாற்ற வேண்டும். இந்திய நலனைத்தாண்டி, தாம் பிரதிநிதித்துவம் செய்கிற மக்களின் நலனை முன்னிறுத்தி, தமிழ்த் தலைமைகள் இயங்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக விடுத்திருக்கிற இந்த அழைப்பு, வரலாற்று முக்கியத்துவம் மிக்கது. இதனை வெற்று நடவடிக்கையாக அன்றி, சாதகமானதொரு முன்னெடுப்பாக மாற்ற வேண்டிய கடப்பாடு, தமிழ்த் தலைமைகளுக்கும் ஜனாதிபதிக்கும் உரியது. மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இது இன்னோர் ஏமாற்றமாக அமைந்துவிடக்கூடாது.


கர்நாடகா

# மடிக்கணினிக்கு கட்டணம் கேட்டதால் பரபரப்பு

கர்நாடக மாநிலத்தின் கடக் மாவட்டத்தில், பஸ்ஸில் மடிக்கணினியைப் பயன்படுத்திய நபரிடன் அதிக கட்டணம் அறவிடப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவ இனத்தன்று அரச பஸ்ஸில் நபர் ஒருவர் மடிக்கணினியைப் பயன்படுத்தி வந்துள்ளார். இதனையடுத்து குறித்த நபரிடம் 10 ரூபாய் மேலும் அதிகமாகச் செலுத்துமாறு சாரதி மற்றும் நடத்துநர் கூறியுள்ளனர்.

இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த அந்நபர் "கர்நாடக



போக்குவரத்து கழகம் பிறப்பித்துள்ள சுற்றறிக்கையில், ஒரு பயணி கூடுதல் கட்டணம் செலுத்தாமல் 30 கிலோ வரை எடையுள்ள பொருட்களை எடுத்துச் செல்லமுடியும்" எனத் தெரிவித்துள்ளார்.

எனினும்அப்பொருட்களின் பட்டியலில் மடிக்கணினிகள் குறிப்பிடப்படவில்லை எனவும் இதனால் கூடுதல் கட்டணம் வசூலிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து அந்நபர் தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டதைத் தொடந்து இது மக்கள் மத்தியில் பெரும் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் மடிக்கணினிக்கு கூடுதல் கட்டணம் வசூலிப்பது கண்டறியப்பட்டால், பஸ் நடத்துநர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என கர்நாடக போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது.



கர்நாடகா

## முதல் மனைவியுடன் இணைந்து உயிர் மாய்ப்பு

இரண்டாவது திருமணம் செய்த நிலையில், முதல் மனைவியுடன் இணைந்து இராணுவ வீரர் ஒருவர் தனது உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் கர்நாடகாவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஹாசன் டவுனை சேர்ந்தவர் ஆஷா. கணவரை இழந்த அவர் தனது 2 குழந்தைகளுடன் தனியாக வசித்து வந்துள்ளார். இந்நிலையில் ஆஷாவுக்கும் இராணுவ வீரரான கிரண் என்பவருக்கும் 3 வருடங்களுக்கு முன்பாக பழக்கம் ஏற்பட்டுள்ளது. இப் பழக்கம் காதலாக மாறியநிலையில், 6 மாதங்களுக்கு முன்னர் பெற்றோரின் எதிர்ப்பையும் மீறி கிரண் - ஆஷாவைத் திருமணம் நடைபெற்றது.

இதனையடுத்து பணி நிமித்தமாக வெளியூர் சென்ற கிரண், சில தினங்களுக்கு முன்பு தனது சொந்த ஊருக்கு திரும்பியபோது அவரது பெற்றோர் கிரணின் மனதை மாற்றி வேறு ஒருபெண்ணுக்குத் திருமணம் செய்து வைத்துள்ளனர்.

இதனால் ஆஷா, கிரணின் திருமணத்திற்குச் சென்று தகறாரில் ஈடுபட்டுள்ளார். ஏற்கெனவே திருமணமானதை மறைத்து, கிரனை தமது மகளை திருமணம் செய்ததாக, பெண்வீட்டார் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். விசாரணை இடம்பெற்று வந்த நிலையில், கிரணும் ஆஷாவும் ஒன்றாக வனப்பகுதில் தூக்கிட்டுக் கொண்டனர்.



குஜராத்

## பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு 5 கோடி

குஜராத்தில் மோர்பி மாவட்டத்தில், மச்சு ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட 100 ஆண்டுகள் பழைமையான தொங்கு பாலம், ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி அறுந்து விழுந்தது. இவ்விபத்தில் குழந்தைகள் உட்பட 135 பேர் உயிரிழந்தனர்.


முழு இந்தியாவையும் பெரும் சோகத்தில் ஆழ்த்திய இவ்விபத்துத் தொடர்பில் இதுவரை 9 பேரை பொலிஸார் கைது செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இவ்விபத்தில் பெற்றோரில் ஒருவர் அல்லது இரண்டு பேரையும் இழந்த 20 குழந்தைகளின் நலனுக்காக 5 கோடி ரூபாய் நன்கொடை அளிக்க அதானி தொண்டு நிறுவனம் முன்வந்துள்ளது.

அந்தவகையில் மொத்தமாக 20 குழந்தைகளுக்கு தலா 25 இலட்சம் ரூபாய் வழங்க அதானி தொண்டு நிறுவனம் முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப்

## கணவரைக் காப்பாற்றுவதாகக் கூறி பெண் பாலியல் வன்புணர்வு



சிறையில் உள்ள கணவரை வெளியே எடுக்க உதவி செய்வதாகக் கூறி பெண்ணொருவரை, நபரொருவர் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டுள்ளார்.

பஞ்சாப் மாநிலம் கபுர்தலா மாவட்டத்தைச் சேர்ந்த குறித்த பெண்ணின் கணவர், குற்றமொன்று புரிந்தமைக்காக அண்மையில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில் அவரை சிறையில் இருந்து பிணையில் வெளியே கொண்டு வர உதவுவதாக அப்பெண்ணிடம் அதேபகுதியை சேர்ந்த ஸ்வர்பூ சிங் என்பவர் தெரிவித்துள்ளார்.

இதை நம்பிய அப் பெண் ஸ்வர்பூ சிங்கிற்கு 50,000 ரூபாய் கொடுத்துள்ளார்.

இந்நிலையில், வழக்கு விடயமாகப் பேசவேண்டும் எனக் கூறி தனது வீட்டுக்கு அப் பெண்ணை அழைத்துச்சென்ற சிங், குளிர்பானத்தில் மயக்க மருந்து கொடுத்து அவரைப் பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். மேலும் அதனை வீடியோவாகவும் எடுத்துள்ளார். இந்நிலையில் மயக்கம் தெளிந்த அந்த பெண் தனக்கு நடந்த கொடூரம் குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.



நாக்பூர்

## மகளுக்கு தந்தை செய்த கொடூரம்

மராட்டிய மாநிலம் நாக்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த 16 வயதான சிறுமி, கடந்த 6ஆம் திகதி தனது வீட்டில் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இச்சம்பவம் குறித்து தகவலறிந்த பொலிஸார் சிறுமியின் உடலை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர்.

இதன்போது அவரது வீட்டில் இருந்து 5 கடிதங்கள் கைப்பற்றப்பட்டன. அதில், தனது தற்கொலைக்கு காரணம், தனது வளர்ப்புத் தாய், மாமா, அத்தை, தாத்தா, பாட்டி என குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து குறித்த 5 பேர் மீதும் வழக்குப் பதிவு செய்த இது குறித்து தீவிரமாக விசாரணை நடத்திய போது பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்தன.

அந்தவகையில், தனது உறவினர்களைச் சிக்க வைக்க சிறுமியின் தந்தையான 40 வயது நபரே தனது மகளைக் கொலை செய்துள்ளார் என்பதும் அந்நபரின் தொலைபேசியை ஆய்வு செய்ததில், தற்கொலை கடிதத்தையும் அவரே சிறுமியை வற்புறுத்தி எழுத வைத்துள்ளார் என்பதும் அச்சிறுமியிடம் மின் விசிறியில் தூக்கிடுவது போன்று நடிக்குமாறும், தான் காப்பாற்றுவதாகவும் கூறி, அவரைத் தூக்கில் தொங்க வைத்து காப்பாற்றாமல் அவர் துடிதுடித்து இறப்பதை தனது தொலைபேசியில் வீடியோ எடுத்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

பெங்களூர்

## 'பாஸ்வேர்டை' மாற்றியதால் உயிரை மாய்த்த யுவதி



அலைபேசியின் கடவுச் சொல்லை மாற்றியதால் யுவதியொருவர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பெங்களூர், கானிகர பேட்டை பகுதியை சேர்ந்தவர் ருஜிதா. 19 வயதான இவர் அலைபேசியைப் பயன்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டி வந்துள்ளார். எனினும் இதற்கு அவரது பெற்றோர எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் தனது அக்கா அலைபேசியைப் பயன்படுத்த கூடாது என்பதற்காக, ருஜிதாவின் தம்பி அலைபேசியின் கடவுச்சொல்லை மாற்றியுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த ருஜதா, குறித்த கடவுச்சொல்லைக் கூறும்படி தனது சகோதரனோடு சண்டையிட்டுள்ளார். எனினும் சகோதர் மறுத்து விட்டார்.

இதனால் மன உளைச்சலுக்கு உள்ளான அவர் வீட்டில் யாரும் இல்லாத வேளை, தூக்கிட்டு தன் உயிரை மாய்த்துக்கொண்டார்.

# மீண்டும் செலான் வங்கியின் 'அல்பர்ட் அங்கிள்'

செலான் வங்கி, மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்திருந்த வெஸ்டர்ன் யூனியனின் பணப் பரிமாற்றல் சேவை தொலைக்காட்சி விளம்பரத்தின் 'அல்பர்ட் அங்கிள்' கதாபாத்திரத்தை மீளமைப்பதற்கு முன்வந்துள்ளது. இதனூடாக உத்தியோகபூர்வ முறைகளினூடாக வெளிநாட்டு பண அனுப்புகைகளை ஊக்குவிக்க செலான் வங்கி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இரண்டு தசாப்த காலப்பகுதிக்கு முன்னர், விளம்பரம் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்யப்பட்டிருந்ததுடன், திருமண தினத்தன்று தொலைந்த மோதிரத்துக்கு பதிலாக மாற்று மோதிரமொன்றை கொள்வனவு செய்வதற்கு அவசரமாக ரூ. 50,000 பணத்தை வெஸ்டர்ன் யூனியன் ஊடாக சுரேஷுக்கு அல்பர்ட் அங்கிள் அனுப்பி உதவுவதாக இந்த விளம்பரம் அமைந்திருந்தது. அன்று முதல், இந்த 'அல்பர்ட் அங்கிள்' யார் என்பது இரகசியமாகவே இருந்து வந்துள்ளதுடன், வெளிநாடுகளிலிருந்து பணத்தைப் பெறுவதற்கு மக்கள் மத்தியில் பரவலாக பேசப்படும் ஒரு கதாபாத்திரமாகவும் அமைந்துள்ளது.

வெஸ்டர்ன் யூனியன் ஊடாக உத்தியோகபூர்வமாக வெளிநாட்டுக்கு பணத்தை அனுப்பவும், பெற்றுக் கொள்ளவும் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களை ஊக்குவிப்பதற்காக இந்தக் கதாபாத்திரத்தை மீளமைக்க செலான் வங்கி முன்வந்துள்ளது. இலங்கையின் முதலாவது ஊக்குவிப்புத் திட்டத்தினூடாக 15 பொறுப்பு வாய்ந்த குடிமக்களுக்கு வெகுமதிகள் வழங்கப்படும் என்பதுடன், பிரத்தியேகமான அல்பர்ட் அங்கிள் டிஜிட்டல் பரிசுகள் அடங்கலாக பல வெகுமதிகளை வழங்கும்.

இந்தத் திட்டம் தொடர்பாக செலான் வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகள் உதவி பொது முகாமையாளர்



காமிக டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள நெருக்கடியிலிருந்து ஓரளவு மீள்வதற்கு நாட்டுக்கு கிடைக்கும் அந்நியச் செலாவணியை அதிகரிக்கச் செய்வது முக்கியமானதாகும். இதற்காக 'அன்புடன் அரவணைக்கும்' வங்கி, செலான் வங்கி, உத்தியோகபூர்வ நாளிகைகளினூடாக பணத்தை அனுப்பும் முறையை ஊக்குவித்து அதிகரிக்கச் செய்வதற்கும், அதனூடாக தேசத்துக்கு தீர்வைக் காண்பதில் பங்களிப்பு வழங்குவதற்கும் ஏதேனும் புத்தாக்கமான முறையைக் கையாள்வதைப் பற்றி சிந்தித்திருந்தது. மக்கள் மத்தியில் மனம்மறவாமல் தற்போதும் நிலைத்திருக்கும் அல்பர்ட் அங்கிள் கதாபாத்திரத்தை மீளமைத்து, இளைஞர்களையும், வயது முதிர்ந்தவர்களையும், உத்தியோகபூர்வ நாளிகைகளினூடாக பணத்தை அனுப்பவும், பெறவும் ஊக்குவித்து, தேசத்தின் தேவையை நிவர்த்தி செய்வதில் பங்களிப்பு வழங்க முன்வந்துள்ளது" என்றார்.

டிஜிட்டல் பரிசுகள் அல்லது *non-fungible tokens (NFTs)* போன்றன *blockchain* இல் காணப்படும் *cryptographic* சொத்துகளாக அமைந்திருக்கும் என்பதுடன், இவை கலைப் படைப்பு அல்லது ரியல் எஸ்டேட் போன்ற நிஜஉலகப் பொருட்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமைந்திருக்கும். ஒவ்வொரு *NFT* க்கும் பிரத்தியேகமான அடையாளக் குறியீடு காணப்படுவதுடன், ஏனையவற்றிலிருந்து வேறுபடுத்திக் காண்பிப்பதற்கான *metadata* ஐயும் கொண்டிருக்கும். நிஜ உலகின் புலனாகும் சொத்துகளை *'Tokenizing'* செய்வதனூடாக, கொள்வனவு, விற்பனை மற்றும் வியாபார நடவடிக்கைகளை அதிகளவு வினைத்திறனானதாகவும், மோசடிகள் இடம்பெறும் வாய்ப்புகளைக் குறைப்பதாகவும் அமைந்துள்ளது.

*NFT*களை மையப்படுத்திய, செலான் வங்கியின் பிரத்தியேகமான திட்டத்தினூடாக, 15 வெற்றியாளர்களுக்கும் தலா பிரத்தியேகமான 'அல்பர்ட் அங்கிள்' *NFT* ஐ வழங்கும். 15 வெற்றியாளர்களிலிருந்து ஒரு வெற்றியாளருக்கு ரூ. 100,000 பரிசும் வழங்கப்படும். வெற்றியாளர்கள் மாபெரும் அதிர்ஷ்டசாலி தெரிவிலிருந்து தெரிவு செய்யப்படுவர். இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 45 நாள்களுக்குள், 500 அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை அனுப்பும் எந்தவொரு வெளிநாட்டு நாணயத் தொகையையும் வங்கியின் வெஸ்டர்ன் யூனியன் சேவையினூடாக அனுப்புவோர், செலான் வங்கியின் சமூக வலைத்தள நாளிகைகளினூடாக குறியீட்டு இலக்கத்தை பதிவு செய்வதனூடாக இந்தப் பரிசுகளுக்கான தகைமையைப் பெறுவார்கள்.

செலான் வங்கியின் முன்னுரிமை ஹொட்லைன் இலக்கம், சகல வங்கித் தீர்வுகளுக்கும் கிளைகளில் முன்னுரிமைச் சேவை மற்றும் பல வசதிகளை வெற்றியாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

## கனவுகளுக்கு யூனியன் அஷ்யூரன்ஸ் வலுச் சேர்ப்பு



யூனியன் அஷ்யூரன்ஸ், மஹியங்கனை, ஹந்தகானாவ மகா வித்தியாலயத்துக்கு விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்புச் செய்திருந்தது. இந்தப் பாடசாலையின் ஆசிரியர் ஒருவரின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளினூடாக, அவரின் மாணவர்களின் ரக்பி விளையாட்டுத் திறமைகளை வெளிக் கொண்டுவந்திருந்தமைக்காக இந்த உபகரணத் தொகுதி யூனியன் அஷ்யூரன்சினால் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

பாடசாலையின் விளையாட்டு ஆசிரியராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பாடசாலையில் குறிப்பிட்டளவு விளையாட்டுத் தெரிவுகள் மாத்திரம் மாணவர்களுக்கு காணப்பட்டதை ஆசிரியர் சாமிந்த கருணாரட்ன அவதானித்திருந்தார். மாற்றத்தை ஏற்படுத்தும் உத்வேகத்துடன், இந்த விளையாட்டுகளில் ரக்பி விளையாட்டையும் அவர் இணைத்திருந்தார். இந்த விளையாட்டைப் பற்றி பல மாணவர்கள் இதற்கு முன்னர் கேள்விப்பட்டிருக்கவில்லை. பல தடைகளைக் கடந்து, தமது கடமைகளுக்கு அப்பால் சென்று, இந்த விளையாட்டை பாடசாலையில் அறிமுகம் செய்திருந்தார். குறிப்பாக, பாடசாலை அணிக்கு உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான நிதி உதவியைக்கூட நாடியிருந்தார்.

இவரின் வழிகாட்டலின் கீழ், ஹந்தகானாவ மகா வித்தியாலயத்தின் இளம் விளையாட்டு வீரர்களுக்கு ஒரே வருடத்தினுள் இந்த விளையாட்டு அறிமுகம் செய்யப்பட்டது மாத்திரமன்றி, மத்திய மாகாண காலிறுதிப் போட்டி (14 வயதுக்குட்பட்ட) வரை முன்னேறியிருந்தனர். அத்துடன், அபிவிருத்தி ரக்பி போல் காலிறுதிப் போட்டிகள் வரையிலும் முன்னேறியிருந்தனர்.

இந்த மாணவர்களின் தேவைகள் மற்றும் அவர்களின் பயிற்றுவிப்பாளர் காண்பித்திருந்த ஈடுபாட்டை இனங்கண்டிருந்த யூனியன் அஷ்யூரன்ஸ், ரக்பி அணிக்கு அவசியமான சீருடைகள் மற்றும் பல்வேறு விளையாட்டு உபகரணங்கள் போன்றவற்றை வழங்கியிருந்தது.

கருணாரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "எமது மாணவர்கள் பல திறமைகளைக் கொண்டிருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது. அவற்றை வெளிக்கொண்டு வருவதற்கான ஓர் ஆதாரமாக நான் இருப்பதையே எதிர்பார்த்தேன். இந்தத் தேவைகளை இனங்கண்டு, பொறுப்பு வாய்ந்த கூட்டாண்மை நிறுவனமாக முன்வந்து இந்த மாணவர்களுக்கு உதவும் வகையில் விளையாட்டு உபகரணங்களை வழங்கியிருந்தமைக்காக யூனியன் அஷ்யூரன்சுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். எதிர்காலத்தில் இந்த மாணவர்களுக்கு சிறப்பான முறையில் தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்கு இந்த உபகரணங்கள் மேலும் உதவியாக அமைந்திருக்கும் என நம்புகின்றேன். அதனூடாக பாடசாலைக்கு மேலும் கீர்த்தியைச் சேர்க்கக்கூடியதாக இருக்குமெனவும் கருதுகின்றேன்" என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி மஹேன் குணரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையர்களின் கனவுகளுக்கு வலுச் சேர்ப்பது என்பது யூனியன் அஷ்யூரன்சைச் சேர்ந்த எமது இலக்காகும். கருணாரட்னவின் கதையை இனங்கண்டிருந்ததையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இது அனைவருக்கும் முன்மாதிரியானதாக அமைந்துள்ளது. சவால்களுக்கு மத்தியிலும், ரக்பி விளையாட்டை, இந்தச் சிறுவர்கள் மத்தியில் கொண்டு சேர்த்திருந்தார். இவரைப் போன்ற சிறந்த ஆசிரியர்கள் தம் மாணவர் மத்தியில் தலைசிறந்த வீரர்களாக நிலை கொள்வதுடன், எதிர்காலத் தலைமுறையினர் மத்தியிலும் பெருமளவு விரும்பப்படுபவர்களாக அமைந்துவிடுகின்றனர்" என்றார்.

கருணாரட்ன மற்றும் அவரின் மாணவர்கள் பற்றிய உருக்கமான வீடியோவை யூனியன் அஷ்யூரன்ஸ் தமது சமூக வலைத்தளங்களில் பதிவிட்டிருந்தது. இதற்கு பெருமளவு வரவேற்பும் ஆதரவும் கிடைத்திருந்தது. இவ்வாறான உத்வேகமான நபர்களை இனங்காண்பதில் நிறுவனம் தொடர்ந்தும் தம்மை அர்ப்பணித்துள்ளதுடன், சமூகத்துக்கான தமது பங்களிப்பை வழங்குவதிலும் கவனம் செலுத்துகின்றது.

### இருபதுக்கு 20 உலகக் கிண்ணம்:

# பாகிஸ்தானை வென்று சம்பியனானது இங்கிலாந்து

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வந்த இருபதுக்கு- 20 உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்து சம்பியனானது.

மெல்பேணில் நேற்று (13) நடைபெற்ற பாகிஸ்தானுடனான இறுதிப் போட்டியில் வென்றே இரண்டாவது தடவையாக இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்து சம்பியனானது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்தின் அணித்தலைவர் ஜொஸ் பட்லர், பாகிஸ்தானை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், ஆரம்பத்திலேயே சாம் கர்ரனிடம் மொஹமட் றிஸ்வானை இழந்ததுடன், சிறிது நேரத்தில் அடில் ரஷீட்டிடம் மொஹமட் ஹரிஸையும் இழந்தது. பின்னர் குறிப்பிட்ட நேரத்தில் அணித்தலைவர் பாபர் அஸாமை 32 (28) ஓட்டங்களுடன் ரஷீட்டிடம் பறிகொடுத்த பாகிஸ்தான், உடனேயே இஃப்திஹார் அஹ்மட்டையும் பென் ஸ்டோக்ஸிடம் இழந்தது.

தொடர்ந்து குறிப்பிட்ட நேரத்தில் கர்ரனிடம் 38 (28) ஓட்டங்களுடன் ஷண் மசூட்டை இழந்த பாகிஸ்தான், ஷடாப் கான், மொஹமட் நவாஸ், மொஹமட் வஸிமை கிறிஸ் ஜோர்டான் (2), கர்ரனிடம் பறிகொடுத்து 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது.



பதிலுக்கு 138 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, முதலாவது ஓவரிலேயே அலெக்ஸ் ஹேல்ஸ்ஸை ஷகீன் ஷா அஃப்ரியிடம் இழந்தபோதும் பட்லரின் அதிரடி மூலம் ஓட்டங்களைக் குவித்தது.

பின்னர் பில் ஸோல்ட், பட்லர் ஆகியோர் ஹரிஸ் றாஃப்ப்பிடம் விழுந்ததுடன், குறிப்பிட்ட நேரத்தில் ஹரி ப்ரூக்கும் ஷடாப் கானிடம் வீழ்ந்திருந்தார். இறுதியில் மொயின் அலியும் மொஹமட் வஸிமிடம் வீழ்ந்தபோதும், ஸ்டோக்ஸின் ஆட்டமிழக்காத 52 (49) ஓட்டங்களோடு 19 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கை இங்கிலாந்து அடைந்தது.

இப்போட்டியின் நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் கர்ரன் தெரிவானார்.

### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# தோற்ற நடப்புச் சம்பியன்கள்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரன்ஃபோர்ட்டுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி தோற்றது.

சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை பில் பொடென் பெற்றதோடு, பிரன்ஃபோர்ட் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் இவான் டோனி பெற்றிருந்தார்.

இதேவேளை, நியூகாசில் யுனைட்டெட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் செல்சி தோற்றது. நியூகாசில் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜோ வில்லொக் பெற்றிருந்தார்.

இந்நிலையில், போர்ண்மெத்தின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் தோற்றிருந்தது.

### காலை முறித்துக் கொண்டமையையடுத்து

## நீண்ட காலத்துக்கு மக்ஸ்வெல் இல்லை

அவுஸ்திரேலியாவின் மெல்பேணில் பிறந்தநாள் கொண்டாட்டமொன்றில் வியத்தகு விபத்தொன்றில் காலை முறித்துக் கொண்டமையையடுத்து நீண்ட காலத்துக்கு மக்ஸ்வெல் கிரிக்கெட் விளையாட முடியாமல் போயுள்ளது.

தற்போதைக்கு இங்கிலாந்துக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரிலிருந்து மக்ஸ்வெல் விலகிய நிலையில், அவரை ஷோன் அபொட் பிரதியிட்டுள்ளார்.



# இலங்கையில் உலகக் கிண்ணம்



எதிர்வரும் 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொரை இலங்கை நடாத்தவுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபை நேற்று (13) உறுதிப்படுத்தியுள்ளது.

இறுதியாக இலங்கையில் கடந்த 2012ஆம் ஆண்டே சர்வதேச கிரிக்கெட் சபையின் தொடரொன்றாக உலக இருபதுக்கு - 20 இடம்பெற்றிருந்தது.

### தேசிய மட்டத்தில் நடைபெற்ற டைக்குவாண்டோ போட்டியில்

## பதக்கங்களை பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு

■ க. விஜயரெத்தினம்

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தேசிய ரீதியில் டைக்குவாண்டோ போட்டிகளில் பங்குபற்றி சாதனைகளை புரிந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வானது, எஸ்.கே.ஓ விளையாட்டுக் கழகத்தில், அக்கழகத்தின் தலைவர் கே.ரீ. பிரகாஷ் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதன் போது அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற பாடசாலை மட்ட டைக்குவாண்டோ போட்டியில் பங்குபற்றி தேசிய ரீதியில் இம்மாவட்டத்துக்கான முதலாவது வெண்கலப் பதக்கத்தை ஈட்டிக் கொடுத்து வரலாற்றுச் சாதனை புரிந்த மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவன் டியோன் செலர், முறக்கொட்டான்சேனை இராமகிருஷ்ண மகா வித்தியாலய மாணவன் வீ. கிருஷாந்தன் போன்றோர் விசேடமாக கௌரவிக்கப்பட்டதுடன் மேலும் மாகாண, மாவட்ட ரீதியில் கராத்தே மற்றும் டைக்குவாண்டோ போட்டிகளில் பங்குபற்றி சாதனைகளை புரிந்த மாணவர்களையும் இதன்போது பாராட்டிக் கௌரவித்தார்கள்.

# அவுஸ்திரேலியா

## சொகுசுக் கப்பலில் 800 பேருக்கு கொரோனா

4,600 பேருடன் நியூஸிலாந்திருந்து வந்த ‘மெஜஸ்டிக் பிரின்சஸ்’ என்ற சொகுசுக் கப்பல், 800 கொரோனா நோயாளிகளுடன் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகர துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு சிட்னியில் நிறுத்தப்பட்டிருந்த மற்றொரு சொகுசுக்கப்பலில் 900 பேருக்குக் கொரோனாத் தொற்று இருந்த நிலையில் , அவர்களில் 28 பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




எகிப்து

## கால்வாயில் பஸ் விழுந்து விபத்து; 22 பேர் உயிரிழப்பு

எகிப்தில் பஸ்ஸொன்று கால்வாயில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 22 பேர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அகா நகர் நோக்கி நேற்று முன்தினம் (12) மாணவர்கள் உட்பட்ட சுமார் 46 பேருடன் பயணித்த பஸ்ஸே, வேகக் கட்டுப்பாட்டை இழந்து நெடுஞ்சாலையில் இருந்து விலகி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், பலர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்கா

## அதிரடி அறிவிப்பை வெளியிட்ட எலோன்

பிரபல சமூக வலைத்தளமான டுவிட்டரை கைப்பற்றியுள்ள டெஸ்லா ,ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகர் எலோன் மஸ்க் (Elon musk) அண்மைக்காலமாக டுவிட்டரில் பல மாற்றங்களை செய்து வருகின்றார்.




குறிப்பாக டுவிட்டர் நிறுவனத்தின் தலைமை செயற்பாட்டு அதிகாரி- பராக் அகர்வால் உட்பட முக்கிய பதவிகளில் கடமையாற்றிய பலரை பணிநீக்கம் செய்தார்.

மேலும் டுவிட்டரில் அதிகாரப்பூர்வ கணக்கு எனப்படும் ‘நீல வண்ண டிக் குறியீட்டினைப்‘ (ப்ளூ டிக் ) பயன்படுத்த மாதம் 8 டொலர்கள் வசூலிக்கும் திட்டத்தினையும் அமுல்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்து ஏராளமான கணக்குகள் கட்டணம் செலுத்தி நீல வண்ணக் குறியீடுகளைப் பெற்றனர். அதே சமயத்தில் ஏராளமான போலிக் கணக்குகளும் கட்டணம் செலுத்தி நீல வண்ண டிக் குறியீட்டினைப் பெற்றுள்ளன.

முக்கியப் பிரமுகர்கள், பிரபலங்கள் , பத்திரிகையாளர்கள் போன்ற நம்பகமான மனிதர்களை பின்தொடர ப்ளூ டிக் முக்கிய அடையாளமாகக் கருதப்பட்டது.

எனினும் இத்திட்டத்தால் போலிக் கணக்குகள் அதிகரித்துள்ளதால் குறித்த ப்ளூ டிக் அம்சத்தினை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்ரான்

## இம்ரான்கானுக்கு கமோண்டோ படைப் பாதுகாப்பு

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான், வாஜிரிபாத் நகரில் இடம்பெற்ற பேரணியொன்றில் கலந்து கொண்டார். இதன்போது அவர் மீது மர்ம நபர் ஒருவரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. காயமடைந்த இம்ரான் கான், லாகூரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதுபற்றி பஞ்சாப் மாகாண முதலமைச்சரின் உள்துறை விவகார அந்தரங்க உதவியாளர் உமர் சர்பிராஸ் சீமா கூறுகையில், “இம்ரான்கான் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக சமீபத்திய தகவல்கள் கிடைத்துள்ளன.

அந்தவகையில் இம்ரான்கானுக்கும் அவரது மகனுக்கும் சிறப்பு கமொன்டோ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்றார்



அமெரிக்கா

### சாகச நிகழ்ச்சியில்

## 2ஆம் உலக போர் விமானங்கள் விபத்து; 6 பேர் உயிரிழப்பு

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் டல்லாஸ் நகரில் விமான படை சார்பில் 2-ம் உலக போர் காலத்தின் விமானங்கள் அடங்கிய சாகச நிகழ்ச்சிகள் அண்மையில் நடைபெற்றன.

இந் நிகழ்ச்சியில் 40-க்கும் அதிகமான 2-ம் உலக போர் காலத்து விமானங்கள் பங்கேற்றன.

இந்நிலையில் பெரிய ரக போயிங் பி-17 குண்டுகள் வீசும் விமானம் மற்றும் ஒரு சிறிய ரக பெல் பி-63 கிங்கோப்ரா என்ற விமானமும் விண்ணில் பறந்து சென்றன.

இவ் இரு விமானங்களும் குறிப்பிட்ட அடி உயரத்தில் பறந்து சென்றபோது, நடுவானில் திடீரென மோதி விபத்துக்குள்ளாகின.

இந்நிலையில் குறித்த இரு விமானங்களிலும் பயணித்த 6 பேரும் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இச்சம்பவமானது அமெரிக்காவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



பிரான்ஸ்

## கையில் வளர்ந்த மூக்கு: மருத்துவர்கள் சாதனை

பிரான்ஸைச் சேர்ந்த பெண் ஒருவரின் கையில், மூக்கை வளர்த்து அதனை வெற்றிகரமாக அவரது முகத்தில் பொருத்தி வைத்தியர்கள் சாதனை படைத்துள்ளனர்.

கடந்த 2013ஆம் ஆண்டு குறித்த பெண் தனது மூக்கில் ஏற்பட்ட புற்று நோய் காரணமாக சிகிச்சையொன்றை மேற்கொண்டார்.

ரேடியேஷன் தெரெபி மற்றும் ஹீமோ தெரபி மூலம் அளிக்கப்பட்ட சிகிச்சையில் அவர் அவரது மூக்கின் பெரும் பகுதியை இழக்கும் நிலை ஏற்பட்டது.

இதனால் சில வருடங்களாக அவர் பாதிக்கப்பட்டிருந்தார்.



இறுதியாக அவரது துன்பத்துக்கு விடுதலை கிடைத்துள்ளது.

பிரான்ஸ் நாட்டு அறுவை சிகிச்சை நிபுணர்கள் இந்த புதிய மைல் கல்லை எட்ட மிகுந்த சிரத்தை எடுத்துள்ளனர்.

முதலில் அவரது அறுவைசிகிச்சைக்கு முந்தையப் படங்கள் மூலம் மூக்கின் வடிவத்தைக் கண்டறிந்து அதனை 3டியில் அச்சிட்டனர். இதற்காக அவரது மூட்டிலிருந்து cartilage என்ற பொருளைப் பயன்படுத்தியுள்ளனர்.

இந்த மூக்கின் வடிவ அமைப்பை அவரது முழங்கையில் பொருத்தினர். அதிலிருந்து அவருக்கு தோல் மற்றும் திசுக்கள் வளர்ந்திருக்கிறது.

இரண்டு மாதங்கள் கழித்து அவரது மூக்கு அறுவை சிகிச்சை மூலம் முகத்தில் பொருத்தப்பட்டது. மேலும் மைக்ரோ அறுவை சிகிச்சைகள் மூலம் இரத்த நாளங்களைப் பொருத்தியுள்ளனர்.

இவ் வெற்றிகரமான அறுவை சிகிச்சை உலக அளவில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 14 நவம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.